# 'அண்ணாவை தந்தை செல்வாவில் கண்டேன்'

பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

ஈழநாடு
The EELANADU

மலர்: 19 சித்திரை 20 ஐ: அவ்: 12 இதழ்: 80
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 2-5-77

## நாஞ்சில் மனோகரன் அஞ்சலி

யாழ்ப்பாணம், திங்கள்

''ஒரு அண்ணாவை ஒரு காமராஜரை தந்தை செல்வாவில் கண்டேன். மூதறிஞர் செல்வா சாகவில்லை. தமிழ் மக்கள் மத்தியில் என்றும் வாழ்ந்து கொண்டே இருப்பார்'' என்று இங்கு வந்த திரு. நாஞ்சில்மனோகரன் அஞ்சலி தெரிவித்தார்.

மறைந்த மூதறிஞர் தந்தை செல்வாவின் இறுதி யாத்திரையில் கலந்துகொள்ள நேற்று மாலை கொழும்பு வந்த அ. இ. அ. தி. மு. கழக தலைமைப் பொதுச்செயலாளர் திரு. நாஞ்சில்மனோகரன் நேற்றுக் காலை விமானமார்க்கமாக பலாலி வந்து சேர்ந்தார். இவருடன் தமிழகத்திலிருந்து வந்த முன்னாள் அமைச்சர் பா. உ. சண்முகம், ஆற்காடு வீராசாமி ஆகியோரும் நேற்றுக் காலை யாழ் வந்தனர். இவர்கள் நேற்றுக்காலை 9 மணிக்கு தந்தை செல்வா தகனம்செய்யப்பட்ட இடத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தினர். இதன்பின்னர் திரு. ஏ. அமிர்தலிங்கம் தலைமையில் அவ்விடத்தில் நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்திலும் கலந்துகொண்டனர். திரு. நாஞ்சில்மனோகரன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''தந்தை செல்வா, தமிழுக்காக வாழ்ந்து தமிழினத்துக்குத் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவர். அவர் ஒரு பெரும் தலைவர். அவர் மறைந்துவிட்டார் என்று நான் கருதவில்லை. ஒவ்வொருவர் வாழ்விலும் தந்தை கலந்துவிட்டார். நேற்று கொழும்பு வந்து சேர்ந்ததும் அவசியம் தந்தையின் இறுதி யாத்திரையில் கலந்துகொள்ள பகீரதப்பிரயத்தனம் எடுத்தோம். மக்கள் விடும் கண்ணீருடன் 'நாமும் கண்ணீர் அஞ்சலி செலுத்த விரும்பினோம். ஆனாலும் தவிர்க்க முடியாத காரணத்தால் நேர

(2-ம் பக்கம் பார்க்க)

# மூதறிஞர் அஸ்தியை வெள்ளிப் பேழையில் மைந்தன் எடுத்தார்

## தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர்

யாழ்ப்பாணம், திங்கள்

அமரராகிவிட்ட மூதறிஞர் செல்வாவின் புனித அஸ்தியை நேற்று நண்பகல் 12-30 மணிக்கு அவரது புதல்வர் திரு. சந்திரகாசன் கூட்டணித் தலைவர்கள், ஆதரவாளர்கள் முன்னிலையில் வெள்ளிக் குடமொன்றில் அள்ளிச் சேமித்தார்.

தகனஞ்செய்யப்பட்ட இடத்திற்குக் கூட்டணிச் செயலதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கம், கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம், திரு. சி. நாகராசா, திரு வி. பொன்னம்பலம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மற்றும் பலர் அஞ்சலி செலுத்திய பின், புனித சாம்பலுக்கு நீர் தெளித்த பின்னர் முதலில் கட்டொன்றில் அஸ்தி நிரப்பப்பட்டது. இதைத் தொடர்ந்து புதல்வர் திரு. சந்திரகாசன் வெள்ளிக்குடமொன்றில் புனித அஸ்தியைச் சேமித்துக்கொண்டார். அஸ்தி தெல்லிப்பழையிலுள்ள மூதறிஞரின் இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

(2 ம் பக்கம் பார்க்க)

## சத்தியவாணிமுத்து எம்.ஜி.ஆருடன் சேர்ந்தார்

சென்னை, மே 1

முன்னாள் தி. மு. க. ஹரிஜன நல அமைச்சராக இருந்தவரும், தி. மு. க.வில் இருந்து ராஜினாமா செய்து தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தவருமான திருமதி சத்தியவாணிமுத்து திரு. எம். ஜி. ஆர். தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து கொண்டார்.

இதே நேரம் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகமும் கலைக்கப்பட்டு விட்டதாக இன்று அறிவிக்கப்பட்டது. (உ)

## "செல்வா காலத்தில் நாம் வாழ்ந்ததற்குப் பெருமைப்படவேண்டும்"

—பண்டிதை தங்கம்மா

யாழ்ப்பாணம், திங்கள்

''பெரியவர் செல்வாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்கு இங்கு திரண்டிருக்கும் லட்சோபலட்சம் மக்களும் அன்னாரது இலட்சியத்தைக் கடைப்பிடித்து வாழ்வோம் என்ற உறுதியுடன் வந்திருப்பதைக் காண்கிறேன். அவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பதில் நாம் பெருமைப்படவேண்டும்''

இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற அமரர்

(7-ம் பக்கம் பார்க்க)

## 'இடதுசாரி முன்னணி போலி வேஷம்'

### யாழ். மேதின விழாவில் உரை

யாழ்ப்பாணம், திங்கள்

''எமது கட்சி நாட்டில் மூன்று இடங்களில் கொண்டாடிய மே தினம் சர்வதேச முக்கியத்துவம் பெற்றது. தேர்தலில் ஈடுபட்டு புதிய கோஷங்களுடன் மக்களை ஏமாற்றுவது எமது நோக்கமல்ல'' என்று கம்யூனிஸ்ட் கட்சியினதும் தொழிற்சங்க சம்மேளனத்தினது பிரமுகருமான திரு. காந்தி அபயசேகரா கூறினார்.

சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் மேதினக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. அபயசேகரா மேலும் பேசுகையில்,

புதிய இடசாரி முன்னணியினர் சொல்லுகின்ற சோஷலிசம் தாங்கள் கூட்டுச் சேர்ந்திருந்தபோது செய்ததை மறைக்கச்செய்யும் போலி வேஷமே.

1970-ம் ஆண்டில் யு. என். பி. செத்துவிட்டதென்று

(8-ம் பக்கம் பார்க்க)

### நாளை இதழில்

யாழ்ப்பாணத்தில் நடந்த மூதறிஞர் செல்வாவின் அஞ்சலிக் கூட்டத்தில் அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் மற்றும் தலைவர்கள் நிகழ்த்திய உரைகள் 'ஈழநாடு' நாளைய இதழில் வெளிவரும்.

# மேதின விழாவில் கத்திக்குத்து; கல்வீச்சு; துப்பாக்கிச்சூடு!

கொழும்பு, ஞாயிறு

**கொழும்பில் இன்று நடைபெற்ற மேதின விழாக்களில் இரண்டு கத்திக்குத்துச் சம்பவங்களும், பஸ்களுக்குக் கற்கள் வீசிய சம்பவங்களும் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் இடம் பெற்றன. இதனால் பலர் காயமடைந்தனர். மேதினக் கூட்டங்களில் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.**

லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, திரு. நந்தா எல்லவெலயின்மகாஜன பிரஜா தந்திரவாதக் கட்சி ஆகிய கட்சிகளின் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் ஊர்வலத்தில் ஏற்பட்ட கலவரத்தில் இருவர் கத்திக்குத்துக்கு இலக்கானார்கள். ஏழுபேர் காயமடைந்தார்கள்.

அண்மையில் சமசமாஜக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட கிரியல்ல எம். பி. திரு. வாசுதேவா நாணயக்காரவின் ஆதரவாளர்களும் ஊர்வலத்தின் இடையில் புகுந்துகொண்டனர் என்று கூறப்படுகிறது. மாலை ஒருமணிக்கு கம்பில்பாக்கில் ஆரம்பமாகிய இவர்களின் ஊர்வலம் மாலை 6 மணிக்கு ஹைட்பார்க்கை அடைந்து கூட்டம் ஆரம்பமாகியபோது அங்குவந்த திரு வாசுதேவ நாணயக்காரவின் ஆதரவாளர்களை கூட்ட மைதானத்துள் செல்ல முடியாதபடி பொலிசார் தடுத்து நிறுத்தினர். கூட்டத்தில் மேலும் குழப்பங்கள் ஏற்படும் ஏற்றும் இவர்களை உள்ளே விடவேண்டாமென்றும் கலாநிதி என் எம். பெரேராவும் திரு. வீரக்கோனும் கேட்டுக் கொண்டதற்கமையவே பொலிசார் கூட்டம் முடியும்வரை இவர்களைத் தடுத்து வைத்திருந்தனராம். கூட்டத்தினரிடையே வாசுதேவாவும் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. கூட்டம் விரைவாகவே முடிவடைந்தது.

ஊறுகொடை வத்தையில் ஏற்பட்ட குழப்பமொன்றில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 4 பேர் காயமடைந்தார்கள். இவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

பேலியகொடை, கிராண்பாஸ், மாளிகாவத்தை, களுத்துறை, களனி ஆகிய இடங்களில் பஸ்களுக்குக் கல்வீச்சுச் சம்பவங்கள் பரவலாக இடம் பெற்றனவென்று பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது. (ம)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கல்வயல், சாவகச்சேரியில் ரூபா 13,000/-பெறுமதியுள்ள நன்நீர்க்கிணற்றுடன் கூடிய 10 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்கோ, குத்தகைக்கோ கொடுக்கப்படும். திருமதி. இராசரத்தின ஐயர், 82/6 புகையிரதப்பாதை, கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம். 6046

உயர்ந்த ரகப் பால்மாடுகளும். வளர்ந்த கன்றுகளும் விற்பனைக்குண்டு. 3-5-77 செவ்வாய்க்கிழமை நேரில் பார்வையிட்டு வாங்கிக் கொள்ளலாம். A. சபாரெத்தினம், 115, சபாஸ்லேன், அரசடிவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 6074

## தேவை

யாழ். நகரில் மூன்று மைல் சுற்றுவட்டாரத்துக்குள் நான்கு தொடக்கம் ஆறு படுக்கை அறைகள்கொண்ட வீடு உடனடியாக விலைக்கு வேண்டப்படுகின்றது. கடிதமூலம் தொடர்புகொள்க. விளம்பர இல. 6061, C/o, ஈழநாடு யாழ்ப்பாணம். 6061

அனுபவம் வாய்ந்த நெசவாளர் தேவை. இருப்பிட வசதி உண்டு. நேரில் விண்ணப்பிக்கவும். முகவரி: ஹவுலன் இன்டஸ்றீஸ், 28, பழைய டச்சு ரோட், கோப்பாய் தெற்கு, கோப்பாய். 6070

## வகுப்புகள்

ஆங்கில இலக்கிய வகுப்புக்கள் 10-5-77ல் ஆரம்பமாகின்றன. விபரங்கட்கு: க. யோகேஸ்வரன், 274, முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். 6073


## வெளியூர் இளைஞர் பேரவை

யாழ்ப்பாணம், திங்கள்

தந்தை செல்வாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்துமுகமாக கொழும்பிலிருந்து இளைஞர் பேரவை உறுப்பினர்கள் வந்து அஞ்சலி செலுத்தினர்.

பேராதனை வளாகத்தைச் சேர்ந்த இளைஞர் கோஷ்டியொன்று எஸ். நடேசன் தலைமையில் வந்து அஞ்சலிசெலுத்தியது.

எழுமட்டுவாள் இளைஞர் பேரவையும், திருகோணமலை துறைமுக ஊழியர்களும், பொத்துவில் கூட்டணி ஆதரவாளர்களும், மட்டக்களப்பு கூட்டணி ஆதரவாளர்களும் மற்றும் இடங்களிலிருந்தும் பெருந்தொகையானோர் வந்து இறுதி அஞ்சலி செலுத்தினர். (சு)


# வெற்றுச்சாக்கு கேள்வி விளம்பரம்

கட்டைவேலி-நெல்லியடி ப.நே.கூ. சங்கத்தில் 5000க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்விமூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா. 25/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். சீல்வைத்த கேள்விப்பத்திரங்கள் யாவும் 20-5-77ந் திகதிக்கு முன்னராக பதிவுத்தபால்மூலம் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெற்றுச்சாக்குகளுக்கான கேள்வி'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**
கட்டைவேலி- நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்.
கரவெட்டி,
29-4-77. 6071

# வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

1. சபாரத்தினம் தர்மரத்தினமும் பெண்
2. மதிவதனியும், ஊரெழு, சுன்னாகம்.
   தற்போது ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம்.
   —வாதிகள்

இல: ஈடு / 14347

எதிராக

1. சபாபதி சந்திரசேகரமும் பெண்
2. சரோஜினிதேவியும் பழம் ரோட்டு, வண்ணார் பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம். தற்போதுபலாலி ரோட்டு, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
   — பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் MB / 14347ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1977ம்ஆண்டு மே மாதம் 9-ம் திகதி (9-5-1977) பிற்பகல் 3 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால்விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 8112/-ம் 19-4-1974 தொடக்கம்-07-11-1974 வரைக்கும் ரூபா 5000/-க்கு 12 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 627/20 இதில் 2-9-75ல் பிரதிவாதிகள் செலுத்திய ரூபா 2000/-ம் வழக்குச் செலவில் ஒரு பகுதியாகிய ரூபா 150/-ம் குறைவாகவும் மேலும் 22-7-76ல்செலுத்திய ரூபா 2000/ம் கழித்து.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணமாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை ''கற்ருலப்புலம்'' நில பர. 2ம் வீடும், கொட்டில்களும் கிணறும் அதைச்சேர்ந்தவைகளும் 17-8-1958ல் அளவைக்காரன் கந்தையா அளந்து விபரித்த 478ம் இலக்கப் படத்தில் காட்டப்படும் 1ம் துண்டு இந்தப் பரப்பு இரண்டுக்கும் எல்லை கிழக்கும் வடக்கும் ரோட்டு தெற்கு நவரத்தினம் பெண் திருவிளங்கத்திருதனம். மேற்கு செல்லத்துரை கைம்பெண் தையல்முத்துவிருதனம், இடங்களும்.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
விலைமதிப்பாளரும்

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை.
6-04-77
6072


# தந்தை செல்வா . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரவு வரமுடியவில்லை.

''எந்த நாட்டில் தமிழன் வாழ்ந்தாலும், எங்கள் ஒற்றுமையை அழிக்கமுடியாது! தந்தை கண்ட அகிம்சைவழியில் சென்று அவர் பேணிக் காத்தஇலட்சியத்தை அடைய வேண்டும்.

''தந்தையின் மறைவினல் துயருறும் தமிழ்நெஞ்சங்களே எனது சார்பிலும், அ. இ. அ. தி. மு. கழக பொதுச்செயலாளர் 'பொன்மனச்செம்மல்' சார்பிலும் செலுத்தும் அஞ்சலியை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று திரு. நாஞ்சில் மனோகரன் கூறினர்.

**சண்முகம் அஞ்சலி**

தி. மு. கழக சார்பில் கலந்துகொண்ட திரு. பா. உ. சண்முகம்பேசுகையில், தந்தையின் இலட்சியத்தை தமிழ் மக்கள் நிறைவேற்றவேண்டும் என்ருர்.

''தந்தை செல்வா தமிழகம் வந்தபோது நான் சந்தித்தேன். தளர்ந்த உடல். தளராத இலட்சியம். தமிழின் ஒரு தலைமைதான் அவர். இன்று அவர் இல்லாவிட்டாலும் அவர் இலட்சியத்தை நிறைவேற்ற செயல்வீரர்கள் இங்கு தயாராக இருக்கின்ருர்கள்.

''அண்ணமறைந்தபோது லட்சோப லட்சம் மக்கள் கதறிஅழுதனர். அதுபோல இங்கும் மக்கள் கதறி அழுது கண்ணீர் அஞ்சலி செலுத்தியிருப்பார்கள் இதில் கலந்து கொள்ளமுடியாமற்போனது வேதனையாக இருக்கிறது. தந்தையின் பிரிவால் குமுறும் ஈழம்வாழ் தமிழ்மக்களுக்கும் தந்தையின் குடும்பத்தினருக்கும் எனது சார்பாகவும் கலைஞர் சார்பாகவும் அஞ்சலியைச்செலுத்துகின்றேன். (கா)


# அறிவித்தல்

## பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம்

முருகப்பர் நமசிவாயம்,
பருத்தித்துறை.
(பருத்தித்துறை கொட்டடிப் பிள்ளையார்கோவில் தர்ம கத்தாவும் மனேச்சரும்)
இல: 456/9937

எதிராக

வழக்காளி

இறந்தவர்
1. குமாரசாமி சின்னத்துரை
1 ஏ. துரைசாமி சிவலிங்கம்,
2. செல்லையா துரைசாமி அல்லது வடிவேலு மூவரும், பிரதானவீதி, பருத்தித்துறை.

எதிர்வாதிகள்

மேற்படி வழக்கில் பின்னுற் காணும் அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனத்தின் உரிமையைத் தீர்ப்புக்கடன் பெறுநருக்கு ஒப்படைப்பதில் பிசுக்கால், தீர்ப்புக்கடனளியால் தடைசெய்யப்பட்டுள்ளதாகையால்,

ஏதேனும் உரிமை அல்லது அக்கறையிருப்பதன் பயனக அவ்வாதனம் முழுவதையும் அல்லது ஏதேனும் பாகத்தை உடமையில் வைத்திருப்பவர்களும் தீர்ப்புக்கடன் பெறுநருக்கு உடமை வழங்கப்படுவதனை ஆட்சேபிப்பவர்களுமான எல்லா ஆட்களும் அவரவரது கோரிக்கைகளை இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட பதினைந்து (15)நாட்களுக்குள் இந்நீதிமன்றத்துக்குத்தெரிவிக்கும்படி இத்தால் கோரப்படுகிருர்கள்.

1977ம் ஆண்டு சித்திரை மாதம் 27-ம் திகதி.

**தி. சச்சிதானந்தன்,**
பருத்தித்துறை நீதவான்
நீதிமன்ற பிசுக்கால்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி. பருத்தித்துறைக்கோவிற்பற்று, பருத்தித்துறை வென்றிபாகு தேவன் குறிச்சியிறை ''இராக்கன் மணல்'' நி. பர. 3 கட்டிடங்களும் எல்லை கிழக்கும் வடக்குரோட்டு மேற்கு கோவிலுக்குச் சொந்தமான குளம், தெற்குப்புறமாக பொன்னுச்சாமி கந்தசாமியின் உருமைக்காரரின் ஆதனம் இதில்முழுவதும் இவ்வாதனத்துக்கு நடுப்புறமாக நி. பர. $\frac{3}{4}$ எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு ரோட்டும் கோவிலுக்குரியஆதனமும் மேற்கு கோவிலுக்குச் சொந்தமான ஆதனம், தெற்கு கோவிலுக்குச் சொந்தமானஆதனம்.

**தி. சச்சிதானந்தன்,**
பிஸ்கால்,
பருத்துத்துறை நீதவான்
நீதிமன்றம்.

6059


## யாழ். விற்பனைத் திணைக்களத்தின் சேவை

யாழ்ப்பாணம், திங்கள்

தந்தை செல்வாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்குத் திரண்டிருந்த மக்களுக்குப் பிரதமந்திரியின் உத்தரவின் பேரில் யாழ்.விற்பனைத்திணைக்களத்தினர் மலிவு விலையில் உணவுப்பண்டங்களை வழங்கினர்.

இறுதி அஞ்சலி செலுத்தத் திரளும் மக்கள்வெள்ளத்திற்கு குறைந்தவிலையில் உணவுப் பண்டங்களை விற்பனை செய்ய ஒழுங்குகள் மேற்கொள்ளும்படி கடந்த வெள்ளியன்று நண்பகல் யாழ். விற்பனைத் திணைக்கள ஆணையாளர் திரு. ந. வாமதேவாவுக்கு தொலைபேசி மூலம் மேலிடம் அறிவித்திருந்தது.

இதனையடுத்துத்தொலைபேசி தொடர்பு சீர்கேடு நிலவிய போதிலும் திரு. ந.வாமதேவா விற்பனைத்திணைக்களஅனுராதபுர உதவியாணையாளருடன் தொடர்புகொண்டு குளிர்பானங்கள், சிற்றுண்டிகள், பாண், பணிஸ் போன்றவற்றைத் தாராளமாக வரவழைத்து திரண்டிருந்த மக்களுக்குக் குறைந்தவிலையில் விற்பனை செய்தனர். (அ

## கொழும்பிலிருந்து விசேஷ ரயில்

கொழும்பு, ஞாயிறு

தந்தை செல்வாவின் இறுதிக் கிரியைகளில் மக்கள் பங்குபற்ற வசதியாகக் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொழும்பிலிருந்து 6-55 க்கு விசேஷ புகையிரதமொன்று யாழ்ப்பாணத்திற்குச் சேவையில் ஈடுபட்டது.

இதைத்தொடர்ந்து வழமையான தபால் புகையிரதம் 7.50 க்கு யாழ்ப்பாணம் புறப்பட்டது.

இந்த இரு புகையிரதங்களிலும் செல்ல இடமில்லாத பொதுமக்கள் தனிப்பட்ட வாகனங்கள் மூலம் இரவிரவாக யாழ்ப்பாணப் பிரயாணத்தை மேற்கொண்டனர். (வண்-அ)

## இசைக்கல்லூரி அஞ்சலி

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழுக்காக அல்லும்பகலும் உழைத்த நம் தலைவர் செல்வா மறைந்தது தமிழ் உலகிற்குப் பேரிழப்புஎன்று யாழ். ரசிகரஞ்சனசபா இசைக் கல்லூரியில் நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய கல்லூரி அதிபர் திரு. தா. இராசலிங்கம் கூறினர்.

மேற்படி கல்லூரிமண்டபத்தில் நடைபெற்ற இவ்அஞ்சலிக் கூட்டத்தில் மூன்று நிமிட மௌனஞ்சலியும் செலுத்தப்பட்டது.

திரு. சந்திரா ஸ்ரீபதி பேசுகையில் ''பெரியார் செல்வா சிறுவயது முதல் கர்நாடக இசையில் மிகவும் விருப்பமுள்ளவர். அவர் இறுதியாக நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும் இந்திய டாக்டர் திரு. இராமமூர்த்தியின் ஆலோசனைப்படி நாதஸ்வரஇசையை ஒலிப்பதிவு செய்து ஆஸ்பத்திரியில் ஒலிக்கச் செய்தார்கள். இப்பெரும் தலைவரின் மறைவு தமிழ் மக்கள் அனைவரையும் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டது'' என்ருர்.

இவ் அஞ்சலிக் கூட்டத்தில் கல்லூரி மாணவமாணவிகளும் சபையின் சார்பில் திரு.சந்திரா ஸ்ரீபதியும் கலந்து கொண்டனர். (அ)

## கல்விச்சுற்றுலா

யாழ்ப்பாணம், திங்கள்

மானிப்பாய் இசைக்கல்லூரி தேசிய உயர் கல்வி மாணவர்களுக்கு நாட்டின் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் அறிமுகம் செய்யும் நோக்கத்தோடு ஒரு கல்விச் சுற்றுலா கடந்த 20 ம் திகதி தொடக்கம் 23 ம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டது இவர்கள் அனுராதபுரம், மிகிந்தலை, டம்புல்லை, கண்டி, சிகிரியா, பொலநறுவை கந்தளாய், திருகோணமலை போன்ற இடங்களைச் சகல துறைகளிலும் ஆற்றல் பெற்ற ஆசிரியர்களின் உதவியுடனும், பெற்றோரின் உதவியுடனும் பார்வையிட்டு மீண்டனர். அனுராதபுரத்தில்விவேகானந்த மகாவித்தியாலயத்திலும், கண்டியில் செல்வவிநாயகர் கோவிலிலும், திருகோணமலையில் இந்துக்கல்லூரியிலும் இவர்கள் தங்கினர்கள். (அ)

## கொழும்பிலும் கடைகள் பூட்டு

கொழும்பு, ஞாயிறு

கொழும்பில் இன்று சகல தமிழ் வர்த்தக நிலையங்களும் தந்தை செல்வாவுக்கு அனுதாபந் தெரிவிக்குமுகமாக மூடப்பட்டுள்ளன. பல இடங்களிலும் 'பனர்கள்' தொங்க விடப்பட்டிருக்கின்றன.

தலைவரின் இல்லத்தில் இன்று பிரான்ஸ்தூதர் தேவிநுவர எம். பி. திரு. ரொனி டி மெல், சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திரு. எச். ஆர் பெரேரா, எச். டபிள்யூ. ஜயவர்த்தன உட்பட பலரும் பல சங்கங்களின் பிரதிநிதிகளும் தலைவருக்கு அஞ்சலி செலுத்தி அனுதாபப் புத்தகத்தில் ஒப்பமிட்டனர். (ம)

......

## தெல்லிப் . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

காணமுடியாததாக இருந்தது. பல நூற்றுக்கணக்கான வாகனங்களும் இவ்வூர்வலத்தில் திரண்டுவந்தன. ஒலிபெருக்கி வாகனங்களில் பொதுமக்களால் வெளியிடப்பட்ட அனுதாபத் துண்டுப் பிரசுரங்கள் வாசிக்கப்பட்டன. சிலனஸ் குழுவினரின் சோக கீதம் சோகத்தின்மேல் சோகத்தை ஊட்டிக்கொண்டிருந்தது.

இரவு எட்டரை மணிக்குத் தந்தை செல்வாவின் இறுதி யாத்திரைப் பவனி யாழ். விளையாட்டரங்கை அடைந்த போது தமிழர் கூட்டணி எம். பி.க்களும், உறுப்பினர்களும் ரதத்தின் வடத்தைப் பிடித்து வரவேற்றதையடுத்து, குறுகிய சமய ஆராதனைகளின் பின்னர் தலைவர் செல்வாவின் பூதவுடல் தீயுடன் சங்கமமானது. (அ)

......

## மூதறிஞர்...

( 1ம் பக்கத்தொடர்ச்சி )

தமிழ்நாட்டிலிருந்து வந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களான திரு. ப. உ. சண்முகம், ஆர்க்காடுவீராசாமி அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் நாஞ்சில் மனோகரன் ஆகியோர் நேற்றுக்காலை மூதறிஞர் செல்வா தகனஞ்செய்யப்பட்ட இடத்திற்கு நேரில் அஞ்சலிசெலுத்தினர். யாழ். நகரில் நடந்த சில நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட பின் கொழும்பு திரும்பினர். (கா-அ,

காங்கிரஸ் தோல்வியுற்ற

# 9 மாநில அரசுகளும் கலைப்பு; ஜனாதிபதி ஆட்சி அமுல்!

## உத்தரவில் ஜனாதிபதி கையொப்பமிட்டார்

புதுடில்லி, மே 1

**கடந்த லோகசபைத் தேர்தலில் காங்கிரஸ்கட்சி படுதோல்வி அடைந்த 9 மாநிலங்களிலும் உள்ள அரசுகளை மத்திய அரசு கலைத்துள்ளது. அங்கு ஜனாதிபதி ஆட்சி அமுல்செய்யப்பட்டுள்ளது.**

இதற்கான உத்தரவு ஒன்றில் தற்காலிக் ஜனாதிபதி திரு. ஜட்டி நேற்றிரவு கையெழுத்திட்டார்.

உள்துறை மந்திரி திரு. சரண்சிங் மாநில முதல்வர்களுக்கு தெரிவித்திருந்த யோசனைக்கு எதிராக காங்கிரஸ் மாநிலஅரசுகள் சுப்ரீம் கோர்ட்டில் ஆட்சேபமனு தாக்கல்செய்திருந்தன. அவர்களின் மனுவை சுப்ரீம் கோர்ட் நிராகரித்ததை அடுத்து அம் மாநிலங்களைக் கலைப்பதென்று மத்தியஅரசு முடிவுசெய்திருந்தது.

இதற்கான உத்தரவொன்றை அரசு ஜனாதிபதியின் அங்கீகாரத்திற்காக நேற்றுக்காலை அவரிடம் அனுப்பியிருந்தபோதிலும் அவர் காலதாமதம்செய்து கடந்த இரவே கையெழுத்திட்டார்.

## இளைஞர்கள் ஆர்ப்பாட்டம்

இதேவேளையில் அரசுகளைக் கலைக்கும் உத்தரவில் காலதாமதமின்றிக் கையெழுத்திட்டு உடனடியாக அந்த அரசுகளைக் கலைக்குமாறு கோரிய இளைஞர்கள் பலர் நேற்று மாலை திரு. ஜட்டியின் வீட்டின் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இதேசமயம் மந்திரிசபையும் அவசரமாகக் கூடி ஜனாதிபதியின் காலதாமதம் பற்றி ஆராய்ந்தது. எனினும் திரு. ஜட்டி இரவு எட்டு மணிபோல் தமது அங்கிகாரத்தை வழங்கினர்.

### ஜட்டி அச்சம்?

குறிப்பிட்ட மாநிலங்களில் தேர்தல் நடைபெற்று ஜனதா கட்சி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமது பதவிக்கு ஆபத்து வரலாம் என்ற காரணத்தினலேயே திரு. ஜட்டி இந்த உத்தரவில் கையொப்பமிட விரும்பவில்லையென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். (இ)

## கடத்தல்காரர் சத்தியப்பிரமாணம்

புதுடில்லி, மே 1

கடத்தல் தொழிலைத் தாம் இனிமேல் என்றுமே மேற்கொள்ளப்போவதில்லை. 100 கடத்தல்காரர்கள் நேற்று சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

பம்பாய் ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சைபெற்று சத்திரசிகிச்சை ஒன்றுக்காக நேற்று அமெரிக்கா சென்ற திரு. ஜெயப்பிரகாஷர் முன்னிலையில் அவர்கள் உறுதிப்பத்திரமொன்றில் கையொப்பமிட்டனர்.

நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி இருந்ததால் பலர் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளமுடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. விரைவில் இவர்களும் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வர். (இ)

## அடுத்த மாதம் தேர்தல்?

புதுடில்லி, மே 1

கலைக்கப்பட்ட 9 மாநிலங்களினதும் சட்டசபைகளின் தேர்தல்கள் அடுத்த மாதம் முற்பகுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம் மாநிலங்களில் சட்டசபைத் தேர்தலை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடன் கவனிக்குமாறு இந்திய தலைமைத் தேர்தல் ஆணையாளர் திரு. பி. சுவாமிநாதன் சகல மாநில ஆணையாளர்களுக்கும் பணித்துள்ளார்.

இதேவேளை கட்சித்தலைவர்களும் தேர்தலுக்கான ஆயத்தங்களை மேற்கொண்டுவருகின்றனர். (இ)

## "அனைவராலும் கவரப்பட்ட பெருந்தலைவர்"

—அமெரிக்கத் தூதர்

கொழும்பு, ஞாயிறு

பாகிஸ்தான், கனடா, இந்தியா, அமெரிக்கா, செக்கொஸ்லவாக்கியா, ஈரான், யூகோஸ்லவக்கியா, ஜேர்மன் கூட்டாட்சுக் குடியரசு, பிரிட்டன், அரபு குடியரசு, எகிப்து, சோவியத் நாடு, பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் தூதர்கள் கொழும்பு எஸ். ஜே. வி. இல்லத்திலுள்ள அநுதாபப் புத்தகத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

இந்தியத்தூதர் தலைவரின் உருவப்படத்துக்கு வணக்கம் செய்தபடி நெடுநேரம் மௌனமாக- கவலைதோய்ந்த முகத்தோடு நின்று அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தார்.

அமெரிக்கத் தூதர் தமது அநுதாபத்தில், "திரு. செல்வநாயகம் தமது இனத்தவர்களால் போற்றப்பட்ட தலைவராக மாத்திரமல்ல, பிறமக்களாலும்-அவரை அறிந்த அனைவராலுமே கவரப்பட்ட ஒரு பெருந்தலைவர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதம நீதியரசர் திரு. விக்டர் தென்னக்கூன், உயர் நீதிமன்ற நீதியரசர்கள் திரு. வி. ரி. தாமோதரம், வி. மாணிக்கவாசகர், டி. விமலரத்தின ஜெயரத்தின, மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. ஆர். எம். பெரேரா, மஜிஸ்ரேட் சி. சுந்தரலிங்கம், திருவாளர்கள் லெஸ்லிகுணவர்த்தன, பீற்றர் கெனமன், பொலிஸ் மா அதிபர் திரு. ஸ்டாலி சேனநாயக்கா, கடற்படைத் தளபதி திரு. டி. பி. குணசேகரா, ஓய்வுபெற்ற பொலிஸ் மா அதிபர் திரு. சிட்னி டி சொய்சா, குருநகல ஆயர், திரு. ரங்கநாதன் கியூ.சி, திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி உட்படப் பெருந்தொகையானோர் ஒப்பமிட்டுள்ளனர்.

ஐக்கிய இலங்கை கட்சியின் வாலிபர் இயக்கத் தலைவர் திரு. ரூகன் எஸ். கருணரத்ன அனுதாபப் புத்தகத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்:

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் மறைவு முழு இலங்கைக்குமே ஒருபெரும் இழப்பு. திரு. செல்வநாயகம் ஜனநாயகத்தின் உயர்ந்த உன்னத கோட்பாடுகளுக்கமைய இயங்கி இகளை எமது நாட்டின் வாழ்க்கை முறைகளுக்குள் பரப்பினர். அவர் தமிழ் மக்களின் உயர்ந்த பெருந்தலைவர். ஐக்கிய இலங்கை கட்சி தமிழர் பெருந்தலைவர் திரு. செல்வநாயகத்தின் மறைவு குறித்து ஆழ்ந்த கவலைதெரிவித்துக்கொள்கிறது. (ம)

## "தமிழ்பேசும் சமூகத்தின் துரதிர்ஷ்டம்"

யாழ்ப்பாணம், திங்.

'கல்தோன்றி மண்தோன்றுக்காலத்தே முன்தோன்றி மூத்த தமிழினத்தின் நல்வாழ்வுக்காக அயராது உழைத்தவரும் உலகம்போற்றும் உத்தமரும் ஜீவகாருண்ணியசீலரும் சத்தியத்தின் கோவிலுமான ஈழத்துக்காந்தி தந்தை செல்வாவின் மறைவு தமிழுலகனைத்துக்குமே பேரிழப்பாகும். அவரது மறைவு தமிழ்பேசும் சமூகத்தின் துரதிஷ்டமாகும்'.

இவ்வாறு தமிழர்விடுதலைக் கூட்டணியின் ஈச்சமோட்டைக்கிளைத்தலைவர் திரு. க. சி. நாகலிங்கம் விடுத்த அனுதாபச்செய்யில் குறிப்பிட்டுள்ளார். (அ)

## சாரதியை மரத்தில் கட்டி காரைக் கடத்தினர்

கண்டி, ஞாயிறு

இனந்தெரியாத மூவர் கொண்ட கோஷ்டியொன்று நினதாஸ என்பவரது காரை வாடகைக்கு அமர்த்திச் சென்று வழியில் அவரை மிரட்டிக் காரை நிறுத்தி அவரை மரம் ஒன்றில் கட்டிவைத்துவிட்டுக் காரைக் கடத்திச் சென்றுவிட்டனராம். கண்டியில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணை புரிகின்றனர். (உ)

## வேலணையில் விற்பனைத் திணைக்களக்கிளை

யாழ்ப்பாணம், திங்கள்

வேலணையில் விற்பனைத் திணைக்களத்தின் மரக்கறி கொள்வனவு நிலையத்தை யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபாலா இன்று திங்கட்கிழமை காலை திறந்துவைக்கிறார்.

## எழுத்துவினைஞர் அஞ்சலி

யாழ்ப்பாணம், திங்கள்

தந்தையின் பூதவுடல் வீரசிங்கம் மண்டபத்திலிருந்தபோது எழுதுவினைஞர் சங்க யாழ். கிளையினர் யாழ்ப்பாணம் செயலகத்திலிருந்து மௌன ஊர்வலமாக வந்து, தந்தை செல்வநாயகத்தின் பூதவுடலுக்கு மலர் வளையம் சாற்றி அஞ்சலி செலுத்தினர்.


தலை போகிறதா






பாடசாலை செல்லும பிள்ளைகளின் தாய்மார்களுக்கு அப்படித்தான்...
ஆனல் கெமெக்ஸீனைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தால் அப்படியிருக்கத்தேவையில்லை.
தலைப்பேனை முற்றாக ஒழிக்க துரிதமான, நம்பிக்கையான வழி அதுவே. உங்கள் பிள்ளைகளின் தலையில் கெமெக்ஸீனை ஒரு தடவை உபயோகித்தாற் போதும். பேன் முற்றாக அழிந்துவிடும்.
மீண்டும் பேன் வராமல் தடுப்பதற்கு 3 வாரங்களின் பின்னர் மீண்டும் உபயோகியுங்கள் கெமெக்ஸீன் பாதுகாப்பானது, புணபடுத்தாதது, இதமான வாசனையுடையது.

கெமிககல் இன்டஸ்றீஸ் (கொழும்பு) லிமிட்டட்,
த. பெ. எண் 352, ஹேமாஸ் கட்டிடம்,
பிரிஸ்டல் வீதி, கொழும்பு-1.
தெலிபோன்: 28421-6.

மணிவாக்கு

இம்சை பலவீனர்களுடைய ஆயுதம்; அகிம்சை பலவான்களுடைய ஆயுதம்.

— காந்திமகான்

ஈழநாடு
THE EELANADU

## அடுத்து என்ன?

ஈழத்துத் தமிழ்பேசும் மக்களின் ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வநாயகத்தின் பொன்னுடலையும் இனிக் காணமுடியாது.

தந்தை ஜோதியில் கலந்து விட்டார்.

சென்ற சனிக்கிழமை நடந்த அவரது இறுதி யாத்திரையில் சாதி, மத, இன, மொழி பேதமில்லாமல், லட்சக்கணக்கான மக்கள்கலந்து கொண்டனர்.

பத்துமைல் தூரத்தை இறுதி யாத்திரை சென்றடைவதற்குப் பத்துமணி நேரம் பிடித்ததிலிருந்தே இறுதியாத்திரையில் கலந்து கொண்டமக்களின் தொகையையும் வழிநெடுகிலும் தந்தையின் திருமுகத்தைக் கடைசியாக ஒருதடவை பார்த்துவிடுவதற்காகப் பாசத்தோடு மணிக்கணக்கில் காத்துநின்ற மக்களின் தொகையையும் அறிந்து கொள்ளலாம்.

இலங்கையின் சரித்திரத்திலேயே ஒரு தலைவரின் இறுதி யாத்திரையிலும், இறுதிச் சடங்கிலும் கலந்து கொள்வதற்கு இலட்சக்கணக்கில் மக்கள் திரண்டிருப்பதை இப்போதுதான் பார்க்கிறோம் என்று அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்ட தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் அந்தக்கூட்டத்திலேயேபகிரங்கமாகத் தெரிவித்தனர்.

மக்களுக்காக வாழ்ந்த ஒரு தலைவருக்கு மக்கள் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தித் தமது நன்றிக் கடனை,கண்ணீரைக்காணிக்கையாகச் செலுத்தியதில் ஆச்சரியமில்லை.

தந்தையின் பொன்னுடல் தகனம் செய்யப்படுவதற்கு முன்னர் வெள்ளம் போல் கூடியிருந்த மக்கள் முன் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் சமய, சமூகத் தலைவர்களும் மறைந்த தலைவருக்குப் புகழாஞ்சலி செலுத்தினார்கள்.

இந்த அஞ்சலிக் கூட்டத்தில் தந்தை செல்வாவின் தனிப்பட்ட குணநலன்களையும், அவரது கொள்கைப் பற்றையும் அவர் நீதிக்கும் நியாயத்துக்கும் நேர்மையாக நடத்திய போராட்டங்கள் பற்றியும் தலைவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

'அஞ்சலி செலுத்திய அரசியல் தலைவர்கள் இந்த நாட்டிலுள்ள சிறுபான்மையினரான தமிழ்பேசும் மக்களின் குறைகளையும் பிரச்னைகளையும் தீர்க்கவேண்டும் என்பதையும்எடுத்துக்கூறத் தவறவில்லை.

தமிழ்பேசும் மக்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கு சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒருவழியை விரைவில் காணவேண்டும் என்றும் தேர்தலுக்கு முன்னரே இதற்கு ஒருவழிகாண வேண்டுமென்றும் இக் கூட்டத்தில் அஞ்சலிசெலுத்திய ஒருபிரமுகர்எடுத்துகூறினர்

தந்தையின் தலைமையில் செயல்படும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் இளைஞர்களும் தந்தையின் இலட்சியமான 'தமிழ் ஈழம்' அமைத்தே தீருவோம் என்று அந்தக் கூட்டத்திலேயே உறுதிஎடுத்தனர்.

'தமிழ் ஈழம்' அமைப்பதற்கு அடிப்படையான ஒற்றுமையைக் கட்டிக்காப்போம் என்றும் அவர்கள் உறுதிசெய்தனர்.

'எந்தப் பிரச்னையையும் சமாதானமாகப் பேசித் தீர்க்க விரும்பிய பெரியார்' என்று அரசியல் தலைவர்களால் பாராட்டப்பட்டவர் தந்தை செல்வநாயகம்.

அவர் உயிருடனிருக்கும் போதே எங்கள் காலத்திலேயேதமிழ்பேசும்மக்களின் பிரச்னைகளுக்குத்தீர்வுகண்டு விடுங்கள். இனிவரும் சந்ததியினர் எங்களைப் போலிருப்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை' என்று பெரும்பான்மையினருக்கு யோசனை கூறியிருந்தார்.

'தந்தை செல்வாவின் காலத்திலேயே பிரச்னைகளுக்குத் தீர்வுகாணப்பட வேண்டுமென்பதை மற்றும் பலரும் வற்புறுத்தினர்.

இன்று தந்தை மறைந்து விட்டார்.

தமிழ் பேசும்மக்களின் பிரச்னைகளையும் முன்னெப்போதையும்விடத் தென்னிலங்கைத் தலைவர்களும்மக்களும்நன்குஉணர்ந்துள்ளனர்

தந்தையின்மீது மக்கள் வைத்துள்ள பாசமும்,மதிப்பும் அவரது மறைவின் போது நாடே அறிந்து கொண்டது.

எதற்காக அவர்மீது இவ்வளவு மதிப்பும், அன்பும் என்பது உணரமுடியாததல்ல!

எனவே தமிழ்பேசும் மக்களின் பிரச்னைக்கு மிகவிரைவிலேயே ஒரு தீர்வுகாண்பதற்கு சகல அரசியல், சமய சமூகத் தலைவர்கள் முன்வருவது நாட்டின் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாகும்.

### அவர் குறிக்கோளை நிறுவுவோம்

செல்வா வெமதந்தை சென்று னிறைவனடி
பல்லா யிரவேமும் பரிதவிக்க—சொல்லின்றி
செய்கைதனிற் காட்டுவோம் செந்தமிழீ ழம்பெற்றே
வைகலொன்றில் மக்கள் மனம் ஒன்றி.

தந்தை தனதுகட னாற்றி வழிநடந்தான்
எந்தை வழிநிற்கை எமதுகடன்—நொந்தவழி
ஆழாமே பெற்றிடுவோம் ஆனந்த மாயீழம்
வீழ்நாள் படாமை விரைந்து.

தேசியப் பேரவை செல்லலல்ல எம்முள்
பூசலொழிந் தெந்தை புகழ்நிறுவி—மாசில்
குறிக்கோ ளெதுவோ அது நிறுவ வாரீர்
நெறிப்பட் டொருங்கு நிலைத்து.

'ஈழத் தமிழ் மகன்'

# "உலகத்தமிழர்க்கே செல்வா தந்தையாய் விளங்கினர்"

— நாஞ்சில் மனோகரன்

கொழும்பு, ஞாயிறு அமரர் தந்தை செல்வா இலங்கைத் தமிழர்களுக்கு மட்டும் தந்தை அல்ல; அவர் உலகத் தமிழர்களுக்கே தந்தையாக விளங்கினர். அவருக்கு நாம் செய்யும் அஞ்சலி அவரது புனித பணிகளை நிறைவேற்றுவதே ஆகும்.

இவ்வாறு அகில இந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக் கழக சார்பில் இலங்கை வந்துள்ள திரு. நாஞ்சில் மனோகரன் கொழும்பில் செல்வாவின் இல்லத்தில் நேற்றுமாலை நிகழ்த்திய அஞ்சலி உரையில் தெரிவித்தார்.

செல்வா வாழ்ந்த இந்தப் புனிதமான இல்லத்தில் நிற்கும் பாக்கியம் கிடைத்தது குறித்து தாம் பெருமைப்படுவதாகவும் அவர் கூறினார்.

உலகம் உள்ளளவும்செல்வாவின் புகழ்நிலைத்திருக்கும் என்றும் திரு. மனோகரன் கூறினர். (இ)

# தமிழினம் இழந்தபூமியைப் பெற்றே தீருவோம்

## 'நவம்' வீர சபதம்!

யாழ்ப்பாணம், திங்கள் தந்தையின் நினைவுச்சின்னமாக நாம் கட்டிஎழுப்ப இருக்கும் சுதந்திர தமிழ்ஈழத்துக்கு நம்மிடையே காணப்படும் பலமான ஒற்றுமையை அத்திபாரக்கல்லாக அமைப்போம்'' என்று நேற்று முன்தினமிரவு நடைபெற்ற தந்தையின் இறுதி அஞ்சலிக்கூட்டத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் கூறினர். தமிழ்க் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. நவரத்தினம் மேலும் கூறியதாவது:

'அமரர் திருச்செல்வம்போன வழியைத் தொடர்ந்து மாபெரும் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அகால மரணத்தால் தாங்கொணுத் துயருற்று இன்று, பிரதேச வாரியாக, சாதி சமய, உயர்வு தாழ்வுகளினுல், பிளவுபட்டிருந்த தமிழினத்தை ஒன்றுசேர்த்து ஒருகொடியின் கீழ் கொண்டுவந்த உன்னதமான சத்தியன் மூதறிஞர் செல்வாவுக்கு உள்ளம் உருகக் கண்ணீர் பெருகக் கூடியிருக்கும் மக்ககள் கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் விடுதலை வீரன் சிவசிதம்பரம்சார்பிலும் தந்தை காட்டிய இலட்சியப் பாதையில் தமிழினத்தை வழிநடத்திச்செல்லும் எமது அரசியல் தலைவர் தளபதி அமிர்தலிங்கம் சார்பிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்கள்; உறுப்பினர்கள் சார்பிலும், ஏனைய கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் சார்பிலும் தந்தையின் லட்சியத்தை ஏற்று அத்தனை தமிழ்பேசும் மக்கள் சார்பிலும் தமிழினத்தின் இழந்தபூமியைப்பெற்றே தீருவோம் என்று பாராளுமன்றத்தில் வீரமுழக்கம் செய்த தந்தையில் புனித உடலின் மேல் அணையிடுகின்றோம்.''

## ஊர்வலத்தில் இளைஞர் காயம்

வண்ணார்பண்ணை, ஞாயிறு தந்தை செல்வாவின் இறுதி அஞ்சலியில் கலந்துகொள்ள வந்த இளைஞர் ஒருவர் தமது காலை இழக்கும் நிலையிலுள்ளார். இவர் வந்த உழவுயந்திரத்தின் பின்னல் வந்த வேறொரு உழவு யந்திரம் முன்னல் வந்த யந்திரத்துடன் மோதியதில் இவரது கால்கள் பாதிக்கப்பட்டன.

இவ்வாலிபர் காங்கேசன் துறைப் பகுதியைச் சேர்ந்தவரென்று தெரியவருகிறது. (அ)

## பவனியில் கிளிநொச்சி விவசாயிகள்

வண்ணார்பண்ணை, ஞாயிறு கிளிநொச்சி எம். பி. திரு. ஆனந்தசங்கரி தலைமையில் பதினைந்து டிராக்டர்களில் கிளிநொச்சி விவசாயிகள் இங்கு வந்து தந்தையின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் இவ்வூர்லத்தில் கலந்துகொண்டனர். (அ)

## "நேர்மைமிக்க தலைவரை இழந்து தவிக்கிறோம்"

— கிளிநொச்சி எம். பி.

கிளிநொச்சி,ஞாயிறு ஒரு நேர்மையான அரசியல் வாதியையும் முதுபெரும் அறிஞரையும் இழந்து தமிழ்ப் பேசும் இனம் ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ளது. கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: பெரியாரின் அபிலாஷைகளில் தமிழ்பேசும் மக்களின் உரிமை பெறுவதே நோக்கமாக இருந்து கால் நூற்றுண்டாக கடமை, கண்ணியம் கட்டுப்பாடு என்ற கோப்புடன் இயங்கி தமிழ் பேசும் மக்களை ஒன்றுபடுத்தினர்.

அவரின் பூரணமான அபிலாஷைகள் நிறைவேறுது எம்மை விட்டுப் பிரிந்தமை பெரும் துயரில் எங்களை ஆழ்த்தியுள்ளது.

அவரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்பதுடன், அன்னரின் இலட்சியங்கள் நிறைவேற பின்னல் வரும் தலைவர்கள் ஒன்று சேர்ந்து செயல்பட வேண்டும். (க)

## தொலைபேசி சேவை

யாழ்ப்பாணம், திங்கள் தந்தை செல்வா அமரரான போது தொலை பேசிச் செய்திகளை உடனுக்குடன் அனுப்புவதில் யாழ். மத்திய தபால் நிலையம் பெரும் சேவையாற்றியது இங்குகுறிப்பிடத்தக்கது. உதவித் தபால் நிலைய அதிபர் திரு. சி. தர்மராஜன் மேற்கொண்ட நடவடிக்கையின் பலனுகவே தொலை பேசித் தொடர்பு கொள்வது மிகவும் சுலபமாக விருந்தது. இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட சுப்பிரிண்டன்ட் திரு. வியனகே கவனித்திருந்தார்.

# தமிழினத்திற்கு வழிகாட்டும் தீபமாகத் திகழ்ந்தார்

—சங்கரப்பிள்ளை

யாழ்ப்பாணம், திங். ''அரசியலில் இறுதிவரை புகழ்மங்காது வாழ்ந்தவர்கள் மிகச் சிலர். ஆனல் அமரர் செல்வா இறுதிவரை உச்சமான புகழ்நிலையில் நின்றது மன்றி. என்றென்றைக்கும் தமிழினத்திற்கு வழிகாட்டும் தீபமாகத் திகழ்கின்றார்''.

தமிழ்க்காங்கிரஸ் நிர்வாகச் செயலாளர் திரு. தா சங்கரப்பிள்ளை வெளியிட்ட இரங்கற் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த இரங்கற்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''தமிழினத்தை ஒன்றுபடுத்திய பெருமையையும், இறுதிவரை கட்டிக்காத்த பெரும்புகழையும் பெற்றார். கொள்கை வகையால் 'ஈழத்துக்காந்தி' என்றும், மக்கள் பற்றால் 'தந்தை' என்றும் புகழுரைகளைப் பெற்றார்.

'அவர்வாழ்ந்த 80 ஆண்டுகளில் ஏறக்குறைய அரைவாசி ஆயுளையும் தமிழினத்திற்கே அர்ப்பணித்து வாழ்ந்தார்.

'மறைந்த தலைவர் அரசியல்வாதி மட்டுமல்ல, இளம்வயதிலேயே புகழ்பெற்ற சட்ட வல்லுனராகத் திகழ்ந்தார். கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெறும் அத்தனை வழக்குகளிலும் ஏதாவது ஒரு கட்சிசார்பில் ஏற்படுத்தப்பட்டிருப்பார். சட்ட வல்லுநராக இருந்து இளைப்பாறும் வரை ஏறக்குறைய 20 ஆண்டுகள் உயர்நீதிமன்றத்தில் மிகச் சிறந்த வழக்கு உரைப்பாளராகத் திகழ்ந்தார்.

தமிழ்க்காங்கிரஸ் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன். (க-அ)

## நீர்கொழும்பில் சோகம்

நீர்கொழும்பு, ஞாயிறு தந்தை செல்வாவின் மரணச் செய்தி கேட்டதும் நீர்கொழும்பு நகரில் பெரும்பாலான வர்த்தகநிலையங்களில் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டன.

நீர்கொழும்பில் பல இடங்களில் தந்தை செல்வநாயகத்தின் படங்கள் ஒட்டித் தோரணங்கள், கறுப்புக் கொடிகள்

(7-ம் பக்கம் பார்க்க)

# தெல்லிப்பழையிலிருந்து யாழ். நகருக்கு வெண்ரதத்தில் தந்தை பவனி வருகிறார்

யாழ்ப்பாணம், திங்கள் ஈழத் தமிழினத்தின் தலைவர் திரு. செல்வநாயகத்தின் இறுதி யாத்திரை, லட்சக்கணக்கான மக்களுடன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலிருந்து கடந்த சனியன்று காலை பத்தரை மணிக்கு ஆரம்பமானது. இவ்விறுதி யாத்திரை தகனஞ்செய்யுமிடத்தை அடையப் பத்து மணித்தியாலங்கள் எடுத்தன.

## 18 அடி உயர வெண் ரதம்

திருநெல்வேலிச் சிற்பாசாரியார்களால் உருவாக்கப்பட்ட பதினெட்டடி உயரமான வெண்ணிறரதத்தில் அமரரின் பூதவுடல் கண்ணாடிப்பேழையில் வைக்கப்பட்டிருந்தது.

தந்தையின் பூதவுடலைத் தாங்கிய ரதம், வடக்கயிறு போடப்பட்டு, அக்கயிற்றை இளைஞர்கள் சிறுவர்கள் பெரியோர்கள் இழுத்துவந்தனர். ரதத்திற்கு முன்பாகத் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம், செல்வாவின் புதல்வர் சந்திரகாசன், திரு. கே. துரைரத்தினம் எம். பி. உட்படப் பலர் வந்துகொண்டிருந்தனர்.

இறுதி யாத்திரை ரதத்தின் வடக்கயிறுக்கு அப்பால் சுமார் நான்கு அடி இடைவெளியில் இளைஞர்களும் தொண்டர்களும் ரதத்தைச் சுற்றியும், ஊர்வலம் செல்லும் பாதையைச் சுற்றியும் மக்கள் அலைமோதி, ரதத்தை நெருங்க விடாமல் கண்ணும்கருத்துமாகக்கட்டுப்படுத்திக்கொண்டு வந்தபோதிலும் இறுதி யாத்திரையைத் தரிசிக்கப் புறப்பட்ட மக்கள் வெள்ளத்தின் மோதலால் பல தடவைகளில் வடக்கயிறு அறுந்துகொண்டே இருந்தது.

## தெல்லிப்பழை ஈன்ற உலகத் தமிழ்த் தலைவர்

தெல்லிப்பழை ஈன்ற உலகத் தமிழ்த் தலைவா. இல்லை நீ என்பதனால் உலகம் அதிர்ந்ததையா என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட கொடியையும், உதய சூரியன் கொடியைத் தெல்லிப்பழை இளைஞர்கள் முன்னே பிடித்துவர, அதன் பின்னே கல்லூரி மாணவர்கள் பான்ட் வாத்திய இசை எழுப்பி வர, தமிழ் இளைஞர் பேரவை, மகளிர் பேரவையினர் உதய சூரியன் கொடியுடனும், பல சுலோகங்களுடன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலிருந்து ஊர்வலம் ஆரம்பமானது. ரதத்தின் பின்னே பெண்கள் கிறிஸ்தவ, இந்து சமயப் பாடல்களை இசைத்த வண்ணம் வந்துகொண்டிருந்தனர்.

## ஊர்வலத்தில் தகநாயகா

யூனியன் கல்லூரி வாசலிலிருந்து பத்தரை மணிக்குப் புறப்பட்ட வெண்ரதம் பதினைந்து யார் தூரமுள்ள தெல்லிப்பழைச் சந்தியை அடையச் சுமார் அரைமணி நேரம் பிடித்தது. தெல்லிப்பழைச் சந்தையிலிருந்து தந்தையின் ரதம் சிறிது தூரம் நகர்ந்துகொண்டிருந்த வேளையில் காலி எம். பி. திரு டபிள்யூ. தகநாயகா அங்கு வந்துசேர்ந்தார்.

திரு. தகநாயகா வெண்ரதத்தில் பவனிவந்துகொண்டிருந்த தந்தை செல்வாவின் பூதவுடலைக் கண்ணாடிப் பேழையூடாகச் சிறிது நேரம் வைத்தகண் வாங்காமல் பலத்த சோகத்துடன் பார்வையிட்டார். பின்னர் திரு. சந்திரகாசனிடம் தமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டதுடன் திருவாளர்கள் அமிர்தலிங்கம், துரைரத்தினம் ஆகியோருடன் செல்வாவின் இறுதி யாத்திரை, நோய் சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து உரையாடிக்கொண்டு ஊர்வலத்தில் வந்துகொண்டிருந்தார்.

## கூட்டுத்தாபனப் படப் பிடிப்பு இடைநிறுத்தம்

இறுதி யாத்திரை ஆரம்பமான சொற்ப தூரத்தில் இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் இறுதியாத்திரை படமாக்கப்படுவது இடைநடுவில் நிறுத்தப்பட்டது. வெண்ரதத்திற்கு மிக அண்மையில் இக்கூட்டுத்தாபனத்தின் வாகனம் நின்று படப்பிடிப்பு வேலைகளை நடத்திக்கொண்டிருந்தபோது! ரதத்தைஇழுப்பது மிகக் கஷ்டமாக இருந்தமையால் இளைஞர்களின் வேண்டுகோளையடுத்து, படமாக்கப்படுவது நிறுத்தப்பட்டு, அவ்வாகனம் திசை திருப்பப்பட்டது. ஆனாலும் இறுதியாத்திரையைப் படமாக்கும் இதர பிலிம்யூனிட்டுக்கள் ஊர்வலத்திற்கு இடைஞ்சல் இல்லாதவகையில் மிகத்தூரத்தில் வைத்து இறுதியாத்திரைக்காட்சிகளைப் படமாக்கிக்கொண்டிருந்தார்கள்.

## தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகள்

வெண்ணிற ரத பவனி தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையை அண்மித்த வேளையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப-தலைவர் திரு. வீரசேகரப் பெருமாள், உபகாரியதரிசி, திரு. எஸ். ராஜூ, எட்டியாந்தோட்டை மாவட்டப் பிரதிநிதி திரு. எஸ். அந்தோனிமுத்து, கொழும்பு மாவட்டப் பிரதிநிதி திரு. கே. மாணிக்கம், ஜனநாயகக் காங்கிரசைச் சேர்ந்த வி.பி. கணேசன் ஆகியோர் வந்து ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

## மரங்களில் மக்கள்

பத்து மைல் நீளமான இறுதியாத் திரைபவனியின்போது வீதியின் இருமருங்கிலும் ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர், வயோதிபர் உட்படப் பெருந்தொகையானோர் மலரஞ்சலி செலுத்தினார்கள். மலரஞ்சலி செலுத்தியோர்களில பெருந்தொகையானோர் பெண்களாவர். வீதியின் இருமருங்கிலும் மட்டுமன்றி, மரங்களை, வேலிகள் மாடிகள் ஆகியவற்றிலும் மக்கள் திரண்டிருந்து தலைவருக்கு இறுதி மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

## வீடுதோறும் தாகசாந்தி

அதுமட்டுமன்றி வீதியில் இருமருங்கிலும் உள்ள ஒவ்வொரு வீட்டுவாசல்களிலும் தண்ணீர் கொண்டுவந்து வைக்கப்பட்டு ஊர்வலத்தில் வந்துகொண்டிருந்த மக்களுக்குப் போதியளவு தாகசாந்தி அளிக்கப்பட்டது. கொழுத்தும் வெயிலிலும் களராது ஊர்வலத்தில் வந்துகொண்டிருந்தவர்களின் பாதங்களுக்கு இடையிடையே வீதியின் இருமருக்கிலும் தண்ணீர் ஊற்றியதுடன், தார் வீதிக்கும் தண்ணீர் ஊற்றிக் கொதிக்கும் வெய்யிலின் தாக்கத்தை மக்கள் தணித்துக் கொண்டிருந்தனர். ஊர்வலத்தில் வந்துகொண்டிருந்த பெண்களுக்கு ஆனைக்கோட்டை இளைஞர்களால் சுன்னாகம் நாகம்ஸ் தியேட்டரில் வைத்து இளநீர்கள் வழங்கப்பட்டன.

ஊர்வலம் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையை அண்மித்ததும் வைத்தியசாலை ஊழியர்களும், நோயாளர்களும் மலராஞ்சலி செலுத்தினர். இவ்வூர்வலம் ஆஸ்பத்திரியைத் தாண்டியதும், பிரதானவீதிகளுக்கு அருகிலுள்ள குறுக்குவீதிகளில் விடப்பட்டிருந்த ஒலிபெருக்கி வாகனங்கள், லொறிகள், வான்கள், டிராக்டர்கள் ஆகியன ஊர்வலத்தில் கலந்து முன்னே அணிவகுத்துச் சென்றன. இவ்வாகனங்களில் பெருந்தொகையானோர் திரண்டிருந்தார்கள்.

## த.இ.பேரவையினரும் அ. எ. வினைஞர்களும்

ஒலிபெருக்கி வாகனங்கள் சோககீதம் இசைத்தும், தந்தையின் புகழ்பாடியும் முன்னே செல்ல அதனையடுத்து லொறிகள், வான்கள், கார்கள், ட்ராக்டர் வண்டிகள் சென்றுகொண்டிருக்க, அதன்பின்னே புத்தனம் தமிழ் இளைஞர் பேரவை, திருக்கோணமலைத் தமிழ் இளைஞர் பேரவை, வவுனியாத் தமிழ் இளைஞர் பேரவை, நல்லூர் தமிழ் இளைஞர்பேரவை, வேலணை இளைஞர்பேரவை, அஞ்சல் எழுதுவினைஞர்சங்கம் ஆகியனசுலோகங்களை ஏந்தியவண்ணம் வந்துகொண்டிருந்தன.

அதனைத்தொடர்ந்து நவக்கிரி பெண்கள், மகளிர் பேரவைப்பெண்களும்வந்துகொண்டிருக்க காங்கேசன்துறைக் கடற்படைத் தொண்டர்கள், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரும்இளைஞர்களுடன் மக்களைக் கட்டுப்படுத்திக் கொண்டுவந்தனர்.

## யாழ். வளாக மாணவர்கள்

'அன்று தாயகமாம் தமிழ் ஈழத்தை இழந்தோம். இன்று தந்தையை இழந்து தவிக்கிறோம். தந்தை விரும்பாதது தமிழ்இனத்துள் பிளவு. எம்முள் பிரிவைத் தோற்றுவிக்கும் தேர்தல் நமக்கு ஒருஇழவு. தேர்தலிலே வீண்விரயமாகும் நேரம் – மனிதசக்தி – பணம் என்பவற்றை இனவிடுதலைக்குத் திசைதிருப்புவோம்' என்ற சுலோகங்களை டாக்ஸி ஒன்றில் யாழ். வளாக தமிழ் மாணவர் மன்றத்தினர் கட்டி ஒலிபெருக்கியில் தமது துக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு வந்தனர். அத்துடன் தந்தையின் கனவை நனவாக்க அரசியலில் சுதந்திரம், பொருளாதாரத்தில் சமத்துவம், சமுதாயத்தில் சகோதரத்துவம் கொண்ட சோஷலிச தமிழ்ஈழம் அமைப்போம் என்ற வாசகமும் பொறிக்கப்பட்டிருந்தது. 'தேர்தலை நிராகரிப்போம், தமிழ்நாடு அமைப்போம், சமத்துவமும், சகோதரத்துவம் நிலைக்கட்டும், தூங்குகின்ற தந்தைக்கு ஏங்குகின்ற உள்ளங்கள் சிந்துகின்ற கண்ணீர் ஒற்றுமை' போன்ற சுலோகங்கள் ஊர்வலத்தில் காணப்பட்டன.

கொம்பனித்தெரு தமிழ் வர்த்தகசங்கம், பேராதனை வளாக பல், மிருக, வைத்திய மாணவர்கள், காத்தான்குடி முஸ்லிம் ஐக்கிய முன்னணி உட்படப் பல்வேறு மலர்வளையங்களும் ஊர்வலத்தில் கொண்டுவரப்பட்டன.

## வி. பி. மலராஞ்சலி

மல்லாகம் சந்தியை ஊர்வலம் பன்னிரண்டரைமணிக்கு வந்துசேர்ந்தபோது திரு. வி. பொன்னம்பலம் மலராஞ்சலி செலுத்தியதுடன் நவதானியத்திலான செல்வாவின் உருவம் ஒன்றையும் அவ்வெண்ரதத்தில் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

## ஈ. எல். சேனநாயக்கா

ஊர்வலம் மல்லாகம் சந்தியை நெருங்குமுன்னர் கண்டி எம். பி. திரு. ஈ. எல். சேனநாயக்கா அங்குவந்து சேர்ந்து செல்வாவுக்குஅஞ்சலிசெலுத்தி திருவாளர்கள் சந்திரகாசன், அமிர்தலிங்கம், துரைரத்தினம் ஆகியோருடன் உரையாடினார். ஊர்வலம் மல்லாகம் சந்தியையடைந்ததும் காலி எம். பி. திரு. தகநாயக்கா, கண்டி எம். பி. திரு. சேனநாயக்கா ஆகியோர் ஊர்வலத்தை விட்டு வெளியே சென்றனர், தெல்லிப்பழையிலிருந்து மல்லாகம்வரை சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை ஊர்வலத்தில்வந்த தென்னிலங்கை அரசியல்வாதிகளில் திரு. தகநாயக்கா முதலிடம் வகித்தார். மல்லாகத்தில் வைத்து மல்லாகம் பிரதேச அபிவிருத்திச்சபையினர் மலராஞ்சலி செலுத்தினர்.

## மாணவிகள் களைப்பு

மல்லாகம் சந்தியுடன் ஊர்வலத்தில் வந்துகொண்டிருந்த மாணவிகள் களைப்படையவே நிறுத்தப்பட்டனர். அத்துடன் 'பாண்ட்' கீதம் இசைத்த மாணவிகளும் நிறுத்தப்பட்டனர். இங்கு வீதியோரங்களில் வெள்ளைச்சேலையணிந்த பெண்கள் நின்று அஞ்சலி செலுத்தினர். பல பெரியவர்கள் ஊர்வலத்தில் மல்லாகம் சந்தியிலிருந்து சிவபுராணம் இசைத்துக்கொண்டுவந்தனர். அதனுடன் சிவபுராண மெட்டில் செல்வாவைப்பற்றியும் பாடல்கள் இசைத்து வந்தனர். வெண்ரதத்தின்பின்னே பக்திப்பாடல்களைப் பாடிவந்த பெண்களில் ஒருவர் மயக்கமடைந்து விழவே, அங்குள்ள தொண்டர்கள் உடன் அவருக்கு முதலுதவி அளித்து உதவினர்.

இரதபவனி பிற்பகல் ஒன்றரைமணியளவில் சுன்னாகம் சந்தியை அடைந்தபோது, சுன்னாகம் பட்டினசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம், பட்டினசபை இதர உறுப்பினர்களும் மலரஞ்சலி செலுத்தியதுடன் வெடிகொளுத்தி தந்தையின் இறுதியாத்திரையை வரவேற்றனர்.

## செல்வா பற்றி பொ.நா. சொன்னது

சபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் அங்கு உரைநிகழ்த்தியபோது கூறியதாவது:

தந்தைசெல்வாவுடன் 1947 இல் அவரை எதிர்த்து நான் தேர்தலில் போட்டியிட்டேன். 1951-ல் நான் செனட்டரானதையடுத்து எனக்கு அளித்த வரவேற்பில் தந்தை செல்வா கலந்து கொண்டு இரு விஷயங்களைக்கூறினார். எனது தகப்பனார்தான் செல்வாவின்பெற்றோருக்கு திருமணம் செய்து வைத்தார் என்பதற்காகவும், நாகலிங்கம் ஒரு நேர்மையான அரசியல்வாதி, கொப்புவிட்டுக் கொப்புப் பாயாத அரசியல் வாதி என்பதாலும்தான் இவ்வைபவத்திற்குத் தான் வந்ததாகக்கூறினார். செல்வாவின் வாயிலிருந்து அவதூறு வார்த்தைகளேவராது மிகவும் பண்பானவர்.''

அடுத்துப்பேசிய பட்டினசபை உறுப்பினர் திரு. ஹென்றி தாழ்த்தப்பட்ட மக்களுக்காக செல்வா செய்த சேவையை வர்ணித்துச் சொல்ல முடிய வில்லையெனக் கூறி அழுதபடியே தமது பேச்சை முடித்துக் கொண்டார்.

## இராமநாதன் கல்லூரி ஆசிரியைகளும் மாணவிகளும்

பிற்பகல் இரண்டரை மணிக்கு ஊர்வலம் மருதனமடத்தையடைந்தபோது இராமநாதன் கல்லூரி ஆசிரியைகளும் மாணவர்களும், மாணவிகளும் மலரஞ்சலி செலுத்தினார்கள். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களான ரத்கமை எம்.பி. திரு.எம்.ஜி.மெண்டிஸ் திரு.வி. பொன்னம்பலம் ஆகியோரும் இக்கட்டத்தில் வந்து ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். பறைமேளம் ஒலிக்க ஊர்வலம் யாழ். நகரை நோக்கிநகர்ந்து கொண்டிருந்தது. பிற்பகல் மூன்றுமணிக்கு இறுதி யாத்திரை இணுவிலையடைந்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளை, இளைஞர் பேரவைக்கிளை, இணுவில் வைத்தியசாலை ஊழியர்கள் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தியதுடன் கிறிஸ்தவ இந்துதோத்திரங்களை இசைத்து துதி செய்தனர். இணுவிலில் உள்ள வீடொன்றில் சிறுபிள்ளைகள் பலர் வேலியின்மீது நின்று எரியும் பந்தங்கள் பலவற்றைப்பிடித்துக் கொண்டு நின்றனர். நேரம் தாமதமாவதை கருத்திற்கொண்டு ஊர்வலத்தின் வேகம்சற்று அதிகரிக்கப்பட்டது.

## ஊர்வலத்தில் பிரதி அமைச்சர் மஜீத்

கொக்குவில் சந்தியை பிற்பகல் 4 மணிக்கு ரதபவனி வந்துகொண்டிருந்த வேளையில் தகவல் ஒலிபரப்பு பிரதி அமைச்சர் ஜனாப் மஜீத், மூதூர் நீதவான் கே. ஞானச்சந்திரன் ஆகியோரும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். சிறிது நேரத்தில் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற சொற்ப வேளையில் திரு. வீ. ஆனந்தசங்கரி எம். பி.யும், அவரது ஆதரவாளர்களும் வந்துசேர்ந்தனர். இதற்கு முன்பதாக வவுனியா எம். பி. திரு. செல்லத்தம்புவும் வந்துசேர்ந்தார்.

ரதப் பவனி பிற்பகல் ஐந்து மணியளவில் நாச்சிமார் கோவிலடியை வந்தடைந்தபோது ஜனநெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக முன் சென்றுகொண்டிருந்த பல நூற்றுக்கணக்கான வாகனங்கள் வேறு பாதைக்குத் திசை திருப்பிவிடப்பட்டன. மிகுந்த சன நெருக்கடியினால் நாச்சிமார் கோவிலிலிருந்து யாழ். விளையாட்டரங்கை ரதப்பவனி சென்றடையச் சுமார் மூன்றரை மணித்தியாலங்கள் பிடித்தன.

பவனியில் ஒரேயொரு பொலிஸ் ஜீப்வண்டி சம்பிரதாயத்திற்காக வந்துகொண்டிருந்தபோதிலும் ஊர்வலம் மிகவும் கட்டுப்பாடாகவும் அமைதியாகவும் வந்துகொண்டிருந்தது.

பத்துமைல் நீளமான இவ்வூர்வலத்தின் ஆரம்ப முடிவே

(2-ம் பக்கம் பார்க்க)

— நமது விசேஷ நிருபர்

# சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார்கோவில் மகோற்சவ சிறப்பு இதழ்

## இன்று தேர்த்திருவிழா

# வேண்டுவார் வேண்டியன

## அருளும் சந்திரசேகரப் பிள்ளையார்


—சபா. சோமஸ்கந்தக் குருக்கள் —
(ஆதீனகர்த்தா)

ஈழத்திருநாட்டில், இணையிலாத் தலங்களில், வாழையடி வாழையாக சைவப் பெருங் குடிகள் பல்கிப் பெருகிவாழும் பெரும்பதி பலஉள. பழமையும் புதுமையும் கொண்ட புத்தி, சுனைகள் பல சூழ்ந்து சோர்விலாச்சாதனைகள், சுனை சுனையாய் செந்நெல், சுவையான சூதமும், சாமான்கள் சந்தையிலே, சார்ந்த சிவசங்கங்கள், சாய்ப்புக்கள் செறிய. மன்னும் சித்தான சைவநெறி சிறந்து திகழ்சில பதியாய் மு புலவர், மூவாத முத்தமிழ் , மணியாய் மாவலர் வளைகள், மாதவர்க்கு முடித்து வைத்தார், மகாகணபதியின் மாதவத்தால், மன்னும் முத்தமிழ் வித்தகர்கள் மலிந்து இருந்தார், கயமுகனின் கர்வம் கொண்ட கயாசுரனைக் கடிநின் வீழ்த்தி கணபதியின் சந்திரனார் சேகரர்எனச் சிறக்கின்ற, சுன்னைப் பெரும்பதியில் சுந்தரமாய்ச் சேர்ந்திருந்தார், என்னே எமக்கினி என்றும் பேரின்பம் பரவுவீர் பாரி



டையே பைந்தமிழின் ஆபாபலவே! என்று ஏத்தி அடிபணிந்து இன்பம் பெற்று உய்ய எமது சுன்னையம்பதி ஸ்ரீசந்திரசேகர் விநாயகப் பெருமான் சுன்னாகம் சிறக்கச் சீர்பெற்றுக் காண்கிறார்.

வானளாவிய துவிதள தூபியுடன் தூவியமாய் கம்பம் கொண்டு துவஜமுடன தொண்டர் ஏற்றசிறக்கின்றார். சிவமணியாய் எம்வினைகள் ஈடேற எல்லீரும் ஒருங்கிணைந்து உய்யும்வழி உவந்தளித்த ஆனைமுகக் கடவுளின் ஐங்கரத்தை, தானம் பெறத் அணிந்து தமிழாலேபோற்றித் துதிப்போமே தினந்தினமே முன்னாளில் முதுபக்தர்மண்டல நாயகின் முதலி ஒல்லாந்தர் இடிபாட்டில் இலங்கையில் இணைஇல்லா இத்தலத்தை அழிக்காது தோப்பார் ளைவில் நின்றும் தூரவே தூக்கி இன்று துணிவுடனே தீர்த்தக்குளம் தாளைகள் தலமான தன்இச்சை செந்நெல் செறி செங்களனி சேர்த்தான் என்றே சொன்னாலும் முத்துக் கவிபாட்டில் ஐங்கரனார் உறைகின்றார்! உண்மை என்றும்! உடனே அரிகரனும் மயில் அணியில் மாவிஷ்ணு நரசிங்கப் பேரண்ணல் ஏத்த நின்றார். இன்று எழுநூறு ஆண்டின்பின் இக்கோவில் இணையிலா எளில் கொண்ட ஏந்திழையாள் வல்லமையின் ஆள்பாட்டில் கொடியேற்றி அழகு ரதம் ஈர்க்கப் பெற்றாள் அன்னாளும் ஆனைமுகன் எந்திர சேகரனும்,, எம் பிள்ளைப் பெருமானும் இணைந்தெம்மை இன்பமுடன் வாழவைப்பான்! தொன்மைதிகழ் தூய்மையாய்த் திருத்தலத்தில் ஏத்துவமே.



இப்பேர்ப்பட்ட ஈடு இணையில்லாத சிறப்புடையது, இளைஞர்களின் எழுச்சிக்கு இலக்காகி இருப்பது இன்னிசையில் ஏத்தப்படும் அன்பெனும் நடை அழகி வல்லவைப் பிராட்டி அணுகி ஏத்து முது பெரும் அதித்தலம் அஷ்ட ஐஸ்வரியப் நிறைய உள்ளது சந்திரசேகரப் பிள்ளையார் கோவில். குடாநாட்டில் கோல மூஷிகக் கடவுள் கேட்டவரம் கொடுக்கும் காவியத் தலைவி குவாலயம் போற்றும் ஸ்ரீ வல்லபை அம்மையின் வழிபாட்டால் வீழ்வறாது வாழ்வளிக்கும் தன்னிகரில்லாவிநாயக மூர்த்தி. இவரை எல்லோரும் வழிபட்டு உய்வோமாக.


அன்பளிப்பு





## சந்திரசேகர விநாயகர் உற்சவம்

ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயம் ராக்ஷச வருஷம் ஆனித்திங்கள் நன்னாளில் துவிதளசுந்த விமானப் பொலிவுடன் மகாகும்பாபிஷேகம் நடத்தப்பட்டு தொடர்ந்து மண்டலாபிஷேகம் பொலிவுற நடத்தியும் மலர் வழிபாடு என்னும் லட்சார்ச்சனை நடத்தியும் சித்திரையிற் சிறந்த பூரணை தினத்தை அந்தமாக சாந்திக உற்சவம் நடத்தியும் பேராயிரம் உடைய பெம்மான் அருள் நல்கும் ஐங்கரன் திருவருள் கூட்ட பிலவங்க ஆண்டில் சித்திரைத் திங்கள். சிருடை ஞாயிறு பன்னிரண்டாம் நாள் ஷஷ்டி திதியில் பிரம்ம உற்சவம் என 'விதித்த படி, கொடிமரம் ஸ்தாபித்து கொடியேற்றி உற்சவம் ஆரம்பித்து 9 ம் நாளில் ஐங்கரப் பெருமான் சித்திர ரதோற்சவமும் 10 ம் நாளில் சிறந்த சித்திரா பூரணை தினத்தில் தீர்த்தோற்சவத்துடன் இனிது முடியும்.

—பிரதிஷ்டா
சிரோன்மணி,
சாமி விஸ்வநாதக்
குருக்கள்


ஃ கோவில் அபிஷேகம் ஃ திருவிழாக்கள்
ஃ திருமண விழாக்கள் ஃ புதுமனைப் பிரவேசம்
ஃ புதுமனைக்கு அத்திவாரமிடல்
முதலிய வைபவங்களுக்குத்தேவையான
வாசனைத் திரவியங்களுக்கு

**ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ்**
(மருந்துக்கடை)
பிரதானவிதி, சுன்னாகம்

ஃ கோவில் திருவிழாக்களா
ஃ திருமண வைபவங்களா
இன்றே விஜயம் செய்யவும்

**ராஜன் சவுண் சேவிஸ்**
ஐயனார் கோவிலடி, மல்லாகம்.

**இரத்தின ஆபரணமாளிகை**
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

**அண்ணா கபே**
பஸ் நிலையம், சுன்னாகம்.

ஃ அழகான ஃ துரிதமான ஃ சிக்கனமான
அச்சுவேலைகளுக்கு
யாழ்.குடாநாட்டிலே சிறந்த ஸ்தாபனம்

**திருமகள் அழுத்தகம்**
மெயின் வீதி, சுன்னாகம்
தொலைபேசி: 315
கொழும்பு அலுவலகம்:
39, சதாம் வீதி, கொழும்பு-1
தொலைபேசி: 25959

திருமுறையை ஓதுங்கள்
திருமுறையைக் கேளுங்கள்
திருக்கோவிலை வழிபடுங்கள்
அன்பளிப்பு

**மில்க்வைற் யாழ்ப்பாணம்**

சந்திரசேகரப் பிள்ளையார் மகோற்சவத்தின்
போது விநாயகப் பெருமானின்
அருளைப் பெற்றுய்ய

**எமது நல்லாசிகள்!**

ஸ்ரீ நடன் ஸ்ரோர்ஸ்
கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்.

ஜெயரும்ஸ்,
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

எலக்ரோலக்ஸ்,
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

ராஜன் பழக்கடை,
ஸ்ரேசன் ரோட்,
சுன்னாகம்.

With Best Compliments
From
"FLORA"
K. K. S. Road,
Chunnakam.

பொன்ஸ் ஸ்ரோர்ஸ்,
No: 49 மாக்கற்,
சுன்னாகம்.

நடன முருகன் ஸ்ரோர்ஸ்,
K. K. S. ரோட்.
சுன்னாகம்.

முனீஸ்வர கபே,
K. K. S. வீதி,
சுன்னாகம்.

ரோயல் விளையாட்டுக்கழகம்,
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

With Best Compliments
From
ANANDA TUTORY,
K. K. S. Road,
Chunnakam.

பான்சி பரடைஸ்,
கே. கே. ரோட்,
சுன்னாகம்.

மெடிக்கல்ஸ் சென்ரர்,
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

ஏ. வீ. பி. பான்சி ரேடர்ஸ்,
No: 7 நியூ மாக்கேற்,
சுன்னாகம்,

சுரபி அச்சகம்,
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

''வீனஸ் ரிற்ரோ''
No: 77, 4-ம்குறுக்குத் தெரு,
கொழும்பு-11.

இ. சரவணமுத்து,
மாக்கற்,
சுன்னாகம்.

பாரத் டிஸ்பென்சறி,
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

வெலிங்டன் ஃ முத்துராமன் ஃ சுஜாதா
[யாழ். நகர்] நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 விஜயகுமார்—லதா
[யாழ். நகர்] நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

13 வது வெற்றி வாரம்!
மனோகரா எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

REGAL (JAFFNA)
ஜனத்திரள் நிறைந்த 3-வது வாரம்
Daily at 4 45,7-00&9 30p.m. only
அதிசயம்! ஆனால் உண்மை! பார்க்காதவர்கள் பார்க்கத்துடிக்கிறார்கள் பார்த்தவர்கள் பரவசமடைகிறார்கள். உலகெங்கிலும் ஓடி எண்ணற்ற ரசிகர்களின் ஆதரவைப் பெற்று இன்று உங்கள் மத்தியில் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது. செக்கஸ் (CIRCUS) இன்னும் சில தினங்கட்கு மட்டும்தான். இன்றே பார்த்து மகிழுங்கள் தவறவிடாதீர்கள்.
For All Good Children From 8 to 80!
"CIRCUS"
(A Full Length Circus Film) (Color)
From 9-5-77 ALFIE DARLING

RIO
Grand Release
Entering Jaffna with Hilarious Comedy
LAUGH - LAUGH - LAUGH
HOLIDAY ON THE BUSES
We guarantee, you will have a really hot time.


## தமிழ்-சிங்கள . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னதோ அந்த உடல் எனவியக்கத்தக்க அளவுக்கு அவ்வளவு இளைத்திருந்தார் எனினும், இலங்கைத் தமிழர்களுக்காகப் போர்தொடுப்பதில் களைத்திருந்தார் என்று எவரும் கூறிவிடஇயலாது.

உலகெங்கும் பரந்துகிடக்கும் தமிழ் மக்களின் பாதுகாப்பு அரணாக நமது தி. மு. கழகம் இருப்பது கண்டும், அந்தத் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக தேவைப்படும்போதெல்லாம் குரல்கொடுப்பது கண்டும்- அவர் அடைந்திருந்த மகிழ்ச்சிக்கு அளவேஇல்லை.

இலங்கையில் தமிழர்கள் அவதிக்கு ஆளானபோது அறிஞர் அண்ணா அவர்களின் காலத்தில் தி. மு க. நடத்திய இலங்கைத் தமிழர் ஆதரவுப் பேரணியும், அதன் பின்னர் இலங்கைவாழ தமிழர்களின் துன்ப துயரங்களைப் போக்கத் தி. மு. கழகம், இந்தியப் பேரரசிடம் முறையிட்டு ஆவன செய்திடுமாறு கேட்டுக் கொண்டதையும் மறைந்துவிட்ட தமிழர்களின் மாணிக்கமாம் செல்வா அவர்கள் நன்றிப் பெருக்குடன் நினைவு கூர்ந்திடத் தவறியதே இல்லை.

இலங்கையே அழுதுகொண்டிருக்கும் இன்று! ஏன்; தமிழன் எங்கெங்கு வாழ்கிறனோ அங்கெல்லாம் அவனது இல்லம் இருள் சூழ்ந்துதான் கிடக்கும். உள்ளம் அழுதுகொண்டு தான் இருக்கும்.

### கழகத்தின் பிரச்னையின்போது

இங்கே கடந்த 15 ம் தேதியன்று கழகம் பிரச்னைக்கு உட்பட்டபோதுதான், செல்வாவின் உடல் நிலைபற்றிக் கவலைதரும் செய்தி இலங்கையிலிருந்து தெரிவிக்கப்பட்டது. இலங்கைவாழ் தமிழர்களின் அன்புக் கட்டளையை ஏற்று நரம்பியல் மருத்துவமேதை இராமமூர்த்தி அவர்களை இலங்கைக்கு அனுப்பிவைக்கும் ஏற்பாடுகளைச் செய்தோம். அவரும் மிக்க ஆர்வமுடனும், அக்கறையுடனும் அந்தப் பணியினை ஏற்றுத் தன்னால் முடிந்த முயற்சிகளைச் செய்துவிட்டுத் திரும்பினார்.. இலங்கையில் உள்ள மருத்துவமேதைகளும் செல்வாவின் உயிரை மீட்க அரும்பாடுபட்டு அயராது உழைத்தனர். ஆனால் காலம் தன் முழு வல்லமையைக் காட்டிச் செல்வநாயகம் அவர்களை நம்மிடமிருந்து எடுத்துக் கொண்டுபோய்விட்டது.

செல்வா மறைந்துவிட்டார் எனினும் அவரால் உருவாக்கப்பட்ட ஆற்றல்மிகு தலைவர்கள், தளபதிகள், வீரக் கவிஞர்கள், இலட்சியக் காளைகள் பலர் இருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்களுக்காக செல்வா ஆற்றிய பணியை அவர் வழியில் மற்றவர்கள் தொடர்வார்கள்.

அவர் காத்திட்ட அமைதி- தமிழர், சிங்களவரிடையே பகை மூளாமல் தவிர்த்திடவும்- அதே நேரத்தில் தமிழர்களின் நல்வாழ்வுக்கு வழி அமைத்திடவும் அவர் ஓயாது வழங்கிய உழைப்பு-

இவை என்றென்றும் அந்தத் தியாகச் செல்வத்தை உலகத் தமிழர்களின் நெஞ்சத்தில் அணையாத தீபமாக ஆக்கி வைத்திருக்கும் என்பதுமட்டும் உறுதி.

......

## செல்வா—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வாவின் இறுதிஅஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில் கூறினார்.

திரு. என்.ரி. செல்லத்துரை பேசுகையில் "அல்லும்பகலும் தமிழுக்கு அயராது உழைத்த தந்தை சொல்லாமலே நம்மை விட்டுசொர்க்கலோகம்சென்று விட்டார். சுகம்பெற்று வருவார், சுதந்திரதமிழ்நாட்டைப் பெற்றுத்தருவார் என்று நம்பியிருந்த நாம் கலங்கி நிற்கின்றோம்".

முஸ்லிம் ஐக்கியமுன்னணிச் செயலாளர் ஜனாப் சம்சுதீன் பேசுகையில் முஸ்லிம்களும், தமிழர்களும் ஒற்றுமையாக உரிமைக்காகப் போராட வேண்டுமென அமரர் செல்வா கனவு கண்டார், அவர் கனவு நிறைவுபெறமுன் அவர் மறைந்துவிட்டார் என்றார்.

புத்தளத்தில் ஏழு முஸ்லிம்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டபோது அது பற்றி பாராளுமன்றத்தில் குரலெழுப்பிய ஒரே தலைவர்மூதறிஞர்செல்வா தான். ஒரு லட்சியத்திற்காக வாழ்நாளில் போராடினார். அந்த லட்சியத்தை நிறைவேற்றுவதுதான் நாம் அவருக்குச் செய்யும் நன்றிக்கடனாகும் என்று அவர் மேலும் கூறினார்.

## தந்தை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டான். 1972-ம் ஆண்டு தமிழகத்திற்கு மூதறிஞர்வந்திருந்தார் அவரது தளர்ந்த உடலையும் தளராத கொள்கையையும் நான் கண்டேன்.

### இலட்சியம் ஈடேற வேண்டும்

ஈழத்து மக்களுக்குத்தான் எத்தனைவேதனைகள் அடுத்தடுத்து. வருகின்றது. ஒரு உத்தமனை சத்தியசீலனை இழந்துவிட்டீர்கள். எனினும் அவரது கொள்கை அவரது மறைவிற்குப்பின்னாலும் நம் மோதிணைந்து அவரது இலட்சியம் ஈடேறவேண்டும் அதுதான் தலைவனுக்குப் பெருமை தேடித்தரும் அதுவே நாம் அவருக்குச்செய்யும் கைமாறும் ஆகும்.

## நினைவுச்...

(–ம் பக்கத் தொடர்ச்சி)

அண்ணாவின் உருவச்சிலைக்கும் நாஞ்சில் மனோகரன் மாலை சூட்டி அஞ்சலி செலுத்தினார்.

எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் அதிபர் திரு. தியாகராசா இல்லத்தில் நேற்றுக்காலை இவர்களுக்கு விருந்தளிக்கப்பட்டது. இணுவிலிலுள்ள கல்கிபீடி சின்னத்துரை இல்லத்தில் நண்பகல் விருந்தளிக்கப்பட்ட்து.

இவ்விருந்தில் கூட்டணி செயல்அதிபர் திரு. ஏ. அமிர்லிங்கம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், மட்டுநகர் எம். பி திரு. இராசதுரை, பருத்தித்துறை எம். பி. தி. க. துரைரத்தினம், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் அதிபர் திரு. தியாகராசா, மில்க்வைற் அதிபர் திரு. கனகராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

(க-உ)

## நீர்கொழும்பில்...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

கட்டப்பட்டிருந்தன. கொடிகளில் செல்வாவின் படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. நீர்கொழும்பு சோகமயமாகக் காட்சிகொடுத்தது. (வண்.அ)

## இடதுசாரி...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

சொன்னவர்கள் இன்று யு. என். பி யை பாஸிஸ்டுகள் என்று சொல்லுகிறார்கள். இந்தப் பாஸிஸ்டுகளை வளர்த்தவர்கள் யார்?

வடக்கிற்கும் தெற்கிற்கும் உள் பிரச்னை அடிப்படையில் ஒற்றுமையானவை. பிற்போக்கு சக்திகள் ஐக்கியத்திற்கு எதிராகப்போராடுகின்றன. நாம் அவர்களுக்கு எதிராகப் போராடவேண்டும்.


புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி ஞாயிறு 10-30
தி தெய்வம்

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனிஞாயிறு 2-30
சிவாஜி-பானுமதி
அம்பிகாபதி

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-சாவித்திரி
வேட்டைக்காரன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
∵ நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ∵ உஷா நந்தினி
(இரு வேடங்களில்)
∵ சௌகார் ஜானகி, ∵ சுகுமாரி நடித்த
சிவாஜிகணேசன் பெருமையுடன் அளிக்கும்
விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும்தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மென் கலர்) டைரக்ஷன்: பி. மாதவன் பி. ஏ.

அன்பு மலர்களே நம்பியிருங்களே!
★ நாளை நமதே ★
தெள்ளு தமிழ்க் காவியமென ரசிகப் பெருமக்களால் புகழப்பட்ட வண்ணப் படைப்பு!
யாழ்—ராணி திரையில்
இப்பொழுதுநடை பெறுகிறது
தினசரி 4 காட்சிகள்
புரட்சித் தலைவர்
★ எம்.ஜி.ஆர்.
(இரு வேடங்களில்)
★ லதா ★ நிர்மலா ★ நாகேஷ்
★ நம்பியார்
ஃ ராஜஸ்ரீ ஃ நளினி ஃ வி. எஸ்.ராகவன்
கஜேந்திரா பிலிம்ஸாரின்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

மகத்தான 57-வது நாள்
ஸ்ரீதர் ஃ சிவாஜி (இருவேடம்)
(யாழ்ப்பாணம்) ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா
(யாழ். நகர்)
எஸ். எஸ்.ஆர். - ரங்காராவ்
விஜயகுமாரி
குமுதம்
[தினசரி 4 காட்சிகள்]
(இன்று மட்டும்)

ஈழநாடு
EELANADU

யாழ்ப்பாணம், திங்கள் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது உயிர் நீதத இளைஞர்களின் நினைவுச்சின்னததிற்கு, தமிழ்நாட்டிலிருந்துவந்த தி. மு. க. தலைவர்களும், அ. அ. தி. மு. க. இணைச்செயலாளரும் மலர்மாலைசூட்டி நேற்றுக் காலை அஞ்சலி செலுததினர்கள்.

தி. மு. க. முன்னள் அமைச்சர் திரு. பா. உ. சண்முகம், தி. மு. க. பிரமுகர் திரு. ஆற்காடு வீராசாமி அ. தி. மு. க. செயலாளர் நாஞ்சில் மனோகரன் ஆகியோர் ஒன்ருகவந்து அஞ்சலி செலுததினர்கள்.

## நினைவுச் சின்னத்திற்கு
## நாஞ்சில், சண், வீராசாமி அஞ்சலி செலுத்தினர்

குருநகரில் உள்ள அறிஞர்

(7ம் பக்கம் பார்க்க)

# 'தந்தை செல்வா உருவாக்கிய ஒற்றுமை ஆசாபாசத்திற்காக சிதைந்துவிடக்கூடாது'

## யாழ்நகரில் பா. உ. சண்முகம்

யாழ்ப்பாணம், திங்கள் "ஈழம் வாழ் தமிழ்மக்கள் மட்டுமல்ல இந்த உலகில் தமிழன் எங்கெங்கெல்லாம் வாழ்கின்ருனே. அங்கெல்லாம் தன்மொழியை இரண்டாந்தரமாக்க அல்லது தன்னை இரண்டாந்தரப் பிரஜையாக்க அவன் அனுமதிக்கமாட்டான்"

இவ்வாறு மறைந்த தலைவர் மூதறிஞர் திரு. செல்வநாயகத்தின் மறைவையொட்டி நடைபெற்ற இறுதி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளத் தென் இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த திராவிட முன்னேற்றக் கழக முன்னுள் அமைச்சர் திரு. பா. உ. சண்முகம் யாழ்ப்பாணத்தில் உள்ள த. வி. கூட்டணி அலுவலகத்தில் திரு. ஏ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இரங்கலுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், "நாம் இங்கு வந்திருப்பது தமிழ்மொழியின் பெருமை பற்றிப் பேசவோ அன்றி நமது பாரம்பரிய கலாச்சாரத்தைப் பற்றிப்பேசவோ அல்ல. ஒரு ஒப்பற்ற தலைவனை இழந்துவிட்ட உங்களுடன் சேர்ந்து நாமும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கவேவந்துள்ளோம். தந்தையின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று ஆவலோடு புறப்பட்ட எமக்கு விமானம் சதி செய்ததால் உங்களுடன் கலந்துகொண்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்த முடியாமற் போய் விட்டது. எனினும் அவரது கொழும்பில் உள்ள இல்லத்திலும் இன்று அவரது தெல்லிப்பழையில் உள்ள இல்லத்திலும் அவர் கட்டிக்காத்த கட்சியின் கூட்டணிக்கிளைக் காரியாலயத்தில் நடைபெறுகின்ற அஞ்சலியிலும் நாம் கலந்துகொண்டுள்ளது எமது பெரும் பேருகும். உங்கள் ஆர்வத்தைப் பார்க்கின்றபோது நீங்கள் உங்கள் தலைவனின் பிரிவால் எத்தகைய வேதனை அடைந்துள்ளீர்கள் என்பது புரிகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் உங்களுக்கு ஒன்று சொல்ல ஆசைப்படுகின்றேன்.

### விழிநீரை பரஸ்பரம் துடைப்போம்

இங்கே 35 லட்சம் மக்களின் கண்களில் கண்ணீர் பெருகுகின்றபோது அங்கே தமிழகத்தில் 4 1/2 கோடி மக்களின் 9 கோடிக் கரங்கள் கண்ணீர் துடைக்கக் காத்திருக்கின்றன. அதேபோன்று அங்கே 4 1/2 கோடி மக்கள் கண்ணீர்விட்டால் இங்கே 35 லட்சம் மக்கள் உதிரம் கொட்டத் தயாராகஉள்ளார்கள். நேற்று முன்தினம் தமிழ் இனத்திற்கே துக்கதினம். தமிழ்நாட்டில் உள்ளவர்களும் தந்தையின் அன்புக்குப் பாத்திரமானவர்கள். தந்தை மறைந்ததினுல் அழுதஉங்கள் கண்களின் கண்ணீர் உங்கள் கன்னங்களில் வற்றிவிடலாம் காலம் செல்லச் செல்ல கவலைமறந்துவிடலாம் ஆனுல் முன்னையிலும் இரட்டிப்பாக முழுமூச்சுடன்செயற்பட்டு தந்தை செல்வாவின் இலட்சியத்தை ஈடேற்றவேண்டும். எனக்கு இங்கு மூதறிஞரின் பொன்மொழிகள் சிலவற்றைப் படிக்கும் வாய்ப்புக் கிட்டியது அவரது அந்த வாக்கியங்களைப் படித்தால் உடல் தளர்ந்துவிட்ட கிழவனுக்குக் கூட உள்ளத்தில் புத்துணர்ச்சி ஏற்படும். அவர் தன்பொன் மொழியொன்றில் ஈழத்தமிழன் தான் இரண்டாந்தரப் பிரஜையாகவோ அன்றித் தமிழ்மொழியை இரண்டாந்தா மொழியாக்கவோ விடமாட்டான் என்று எழுதியுள்ளார் அவரது இந்தப் பொன்மொழில் ஒரு சிறுமாற்றத்தை ஏற்படுத்தவேண்டும் எனப் பணிவுடன் வேண்டுகின்றேன். ஈழத்தில் வாழுகின்ற தமிழன் மட்டுமல்ல இந்த உலகில் எங்கெங்கு தமிழன் வாழ்கின்ருனே அவன் தன்னை இரண்டாந்தரப் பிரஜையாகவோ தன்மொழியை இரண்டாம் தர மொழியாகவோ இருக்க

(7ம் பக்கம் பார்க்க)

# தமிழ்-சிங்களபகைமூளாமல் தமிழர் நல்வாழ்வுக்கு வழி அமைக்கவும் — கருணநிதி

இலங்கைத் தமிழர்களுக்காக செல்வா ஆற்றிய பணியை அவர்வழியில் மற்றவர்கள் தொடர்வார்கள். அவர் காத்திட்ட அமைதி, தமிழர்-சிங்களவரிடையே பகை மூளாமல் தவிர்த்திடவும்-அதே நேரத்தில் தமிழர்களின் நல்வாழ்வுக்கு வழி அமைத்திடவும் அவர்ஓயாது வழங்கிய உழைப்பு இவை என்றென்றும் அந்தந்தியாகச் செல்வத்தை உலகத் தமிழர்களின் நெஞ்சத்தில் அணையாத தீபமாக ஆக்கிவைத்திருக்கும் என்பது மட்டும் உறுதி.

இவ்வாறு தி. மு. கழகத் தலைவர் கலைஞர் மு. கருணநிதி, தந்தை செல்வநாயகத்துக்கு தமது அஞ்சலியைச் செலுத்தியிருக்கிருர். விபரம் வருமாறு:-

இலங்கைத் தமிழர்களின் செல்வம் மறைந்துவிட்டது. அந்தோ! இலங்கையில்தான் அடுக்கடுக்காக எத்தனை சோதனைகள்! தமிழர்களின்உணர்ச்சி விளக்காக ஒளிவிட்டுக்கொண்டிருந்த திருச்செல்வம் பிரிந்தார். தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய பொன்னம்பலமும் திடீரென மறைந்தார். இதோ! அள்ள அள்ளக் குறையாத அரும் பெரும் செல்வமாம் ஈழத்துத் தந்தையையும் இழந்துவிட்டோம்.

அல்லற்பட்டு ஆற்ருதுஅழுத கண்ணீரோடு வாழ்வை நகர்த்திக்கொண்டிருந்த இலங்கைத் தமிழர்களுக்கு இவரன்ருே போர்வாளாய் - கேடயமாய்த் திகழ்ந்தார்.

அங்கு எத்தனை அடக்குமுறைகளைத் தமிழர்கள் ஏற்க வேண்டியிருந்தது. தூண்டிவிடப்பட்ட கலவரங்கள் பலவற்றில் தூண்டில் மீன்களாய் தமிழ்க்குலத்தைச்சார்ந்த ஆடவரும் பெண்டிரும் அவதிப்பட்டுத் துடித்திட்டபோது அவர்களுக்குத் துணைநின்ற 'காவல் தெய்வம்' என்ற நிலையில் அல்லவா செல்வா அவர்களின் தொய்வில்லாத் தொண்டு அமைந்திருந்தது.

### குன்றென நிமிர்ந்து நின்ருர்

பசப்புமொழிபேசி அவரைத் தம்பக்கம் இழுத்திட நினைத்தோர்-பதவி சுகம் காட்டி-அவரது பகையைத் தவிர்த்திட முனைந்தோர்-அவர்கள் யாருக்கும் வணங்காத தலையினராக-வைர நெஞ்ச வேங்கையாக-கொண்ட கொள்கையில் குன்றென நிமிர்ந்து நின்று இறுதி மூச்சுப் போகும்வரையில்இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வு ஒன்றையே எண்ணிக்கொண்டிருந்தார் அந்த ஈழததுப் பெருந்தமிழர்.

மூன்றுநான்கு ஆண்டுகட்கு முன்பு தமிழகம் வந்திருந்தார். எங்களையெல்லாம் சந்தித்தார். எலும்பினுல் மட்டுமே உருவா

7ம் பக்கம் பார்க்க)

# 'சாத்வீகமும் அன்புமே உலகை வெல்லும் சரித்திரம் பகரும் உண்மை இது'

## — நாஞ்சில் மனோகரன்

யாழ்ப்பாணம், திங். 'துப்பாக்கி ஏந்தி நீங்கள் போராட வேண்டுமென நாங்கள் தூண்டவரவில்லை. தூண்டில் புழுவாக தவிக்கும் உங்களுடன் கலந்து உங்கள் துயரில் பங்கு கொள்ளவே வந்துள்ளோம்'

இவ்வாறு நேற்றுக் காலை விமானமூலம் யாழ்ப்பாணம் வந்து மறைந்த மூதறிஞருக்கு அஞ்சலி செலுத்திய அகில இந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழக துணைச் செயலாளர் திரு. நாஞ்சில் மனோகரன் கூறினுர்.

அவர் தொடர்ந்து தமது உரையில் கூறியதாவது:

### சத்தியத்தின் திருவுருவம்

'தந்தையின் இழப்பு ஈழம் வாழ் தமிழருக்கு மட்டுமல்ல உலகில் வாழுகின்ற தமிழ்மக்கள் அனைவருமே ஒரு புதையலை இழந்து விட்டார்கள். அவர் ஒரு உத்தமன், சத்தியத்தின் திருவுருவம், சாதவீகத்தின் மறுபிறப்பு, பண்பின் சிகரம், பழகுவதற்கு இனிமையானவர். இவற்றிற்கு எல்லாம் மேலாக உங்கள் இதயம் என்ற சிம்மாசனத்தில் இருந்து ஆட்சி செலுத்தியவர்.

நீங்கள் இரட்டிப்பு உற்சாகத்தோடு செயற்பட்டு அவர் கொண்ட இலட்சியத்திற்காக நீங்கள் பாடுபடவேண்டும். ஒரு நல்ல தலைவனுக்கு இருக்க வேண்டிய உயர்ந்த பண்பு தானக்குப்பின் ஒரு சிறந்த வாரிசை அவர் உருவாக்குவதிலேயே இருக்கிறது. இங்கு தந்தை 'செல்வா' தனக்குப் பின்னர் பல நல்ல தலைவர்களை நம்மிடையே உருவாக்கிய பின்னர் தான் அவர் மறைந்தார்என்பதை நினைத்துப் பார்க்கின்றேன். ஒருதனி மனிதன் சமுதாயத்திற்காகத் தன்னை அர்ப்பணிக்கின்ருன். மொதத சமுதாய நலனுக்காக அதனைப் பின்பற்றுகிற போது மற்றவர்கள் அதனைத் தவருகப் புரிந்து கொண்டு மோதுகின்றபோது இதயங்கள் குமுறுகின்றன.

### சரித்திரம் பகரும் உண்மை

எங்கும் துப்பாக்கி ஏந்திப் போரிட்டவர்கள் வென்றதாக சரித்திரம் கிடையாது. சாதவீகமும் அன்பும் தான் உலகை வென்றிருக்கிறது. உங்களுக்கு அவர் ஏற்றிய அன்புதீ உங்கள் இதயங்களில் இருந்து அணையாது பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமையாகின்றது.

மொழி கலாச்சார உறவுவுகளால் எம்மிடையே என்றும் தொடர்புகள் நிலைத்திருக்குமே தவிர நாம் இங்கு வந்தது உங்களைத் தூண்டிவிட அல்ல, துப்பாக்கி ஏந்திப் போராட அல்ல. தூண்டில் புழுவாகத் துடிக்கும் உங்களுடன் சேர்ந்து உங்கள் துயரங்களில் பங்குகொள்ளவே தான்.

மூதறிஞர் செல்வாவின்பூதவுடல் எரிக்கப்பட்ட இடத்தில் அமைக்கப்படும் நினைவாலயத்தோடு நின்றுவிடாது அவர் வாழ்ந்த இல்லத்தை பொறுப்பேற்று அந்த இல்லதில் அவர் எதை எதைப் பாவித்தாரோ அவற்றைப் பாதுகாக்க வேண்டும். எந்தக் கண்ணுடி அணிந்து அவர் இந்த உலகைக் கண்காணித்தாரோ அதைப்பேண வேண்டும். எந்தப் பேனுவினுல் தமிழர் தம் கருத்துக்களை உலகிற்கு எடுத்துச் சொன்னுரோ அவற்றை பாதுகாதது தமிழ் மக்கள் கோவிலாகத தொழச் செய்யவேண்டும்.

உங்கள் தலைவர் மீதுநீங்கள் கொண்டுள்ள பாசததைப் பார்க்கின்றபோது அவரது இலட்சியம் ஈடேறும் என்பதில் ஐயமில்லை என்ருர். (கா-உ)

## மரண அறிவித்தல்

### வை. சி. சி. கு. சிவானந்தன்

யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச்சங்க நுகர்ச்சிப்பகுதி முகாமையாளர் திரு. சிவானந்தன் காலமாளுர். இவர் காலஞ்சென்ற வை. சி. சி. குமாரசுவாமியின் அருமைப் புதல்வனும் திருமதி தங்காத்தினத்தின் அருமைக் கணவனும், செல்வி. விஜேதினி, அனுஷா, செல்வின், அசோக்குமார், திலக்- ருஜ்குமார் ஆகியோரின் அருமைத் தந்தையும் திரு. சச்சிதானந்தா, டாக்டர் நித்தியானந்தா. திரு. பிரமானந்தா, காலஞ்சென்ற திரு ஞானேஸ்வரன், திரு. சிவகுருநாதன், திருமதிகள் கண்மணியம்மாள் கனகரத்தினம், சத்தியலக்ஷ்மி இராசையா, ஞானம்பிகை சபாரெத்தினம், கௌரியம்மா தம்பிப்பிள்ளை, காந்திமதி அருளானந்தன், விஜயலக்ஷ்மி கணேஷ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னரின் பூதவுடல் சுண்டிக்குளி, சோமசுந்தரம் ஒழுங்கை, 4-ம் இலக்க இல்லத்திலிருந்து இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

6076

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanaadu, Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.